OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
19 JAN 1911
MADRAS.

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1911௵. ஜனவரி௴. 15உ. சாதாரண௵. தைமீ. 2உ. { பகுதி .9

## நாயைக்கண்டால் கல்லைக் காணோம், கல்லைக்கண்டால் நாயைக் காணோம்.

இது நம் நாட்டில் வழங்கும் பழமொழி. இதற்கு அவர் அவர் புத்திகூர்மைக்குத் தக்கபடி பலவாறாகப் பொருள் சொல்லுவார்கள். அப்பலவாறான அர்த்தங்களை வெளியிட்டு ஒவ்வொன்றும் பொருத்தமுடையதல்லவென்று சொல்வதைப் பார்க்கிலும், நம்தேசத்தில் நாயன்மார்களில் ஒருவரும், மஹா ஞானியுமாகிய திருமூலர் இதன்கருத்துஇன்னதென வெளியிட்டிருக்கின்றார். அது வருமாறு.

கல்லால் ஒரு நாயின் உருவம் அமைந்துள்ளது; நாயென்று கருதுங் கால், நாயின்உருவம் மட்டும் நம்மனத்திற்கு வருமேயல்லாமல், கல் என்பது வாராது; அது மறைந்துபோம். கல்லென்று சிந்திக்குங்கால், அது இன்னகல், கருங்கல், வெள்ளைக்கல் முதலிய கல்வர்க்கம் நம் மனத்திற்கு வருமேயல்லாமல், நாய் என்ற உருவம் வாராது. அது மறைந்துபோம். இக்கருத்தினையே, அடியில்வரும்திருமந்திரங்கள் தெளிவாய்க் காட்டுவதுடன், அதன் பிரயோகத்தின் உண்மையையும் நன்கு விளக்குகின்றன.

திருமூலர் பர அவஸ்தையைச்சொல்லும் சமயத்தில் அடியில் வருமாறு:—

பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்,
பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்,

தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

இதன்பொருள்:-பொன்னாலாகிய பூஷணத்தை ஆபரணமென்னும் நோக்கத்தோடு பார்க்குங்கால் பொன்னென்று தோன்றாது ஆபரணமாகவே காணப்படுதல்போலக், கரணவியாபார மேலிட, ஆன்மா தோன்றாது. பொன் என்னும் நோக்கத்தோடு பார்க்குங்கால், ஆபரணம் தோன்றாது. பொன்னாகவே காணப்படுதல்போல, ஆன்மா தன் சுயரூபத்தை யுணர்ந்தபோது கரணவியாபாரம் ஒடுங்கும்.

மரத்தை மறைத்தது மாமத யானை,
மரத்தில் மறைந்தது மாமத யானை,
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்,
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே.

இதன் பொருள்:-மரத்தாலாகிய யானையை யானையென்று கருதி நோக்குங்கால், மரத்தன்மை மறைந்தும், மரமெனக் கருதுங்கால், யானை என்பது மறைந்தும் காணப்படுவதுபோல, பரம்பொருளினிடத்தில் கற்பனையாய்க் காணப்படும் பிரபஞ்சத்தைப் பிரபஞ்சமென நோக்கின் பரம்பொருள் தோன்றாது. பரம்பொருளாகக் காணின், பிரபஞ்சந் தோன்றாது. இதுவே அத்துவைதிகள் மாயை என்று சொல்வதின் உண்மை. இதையே, சாந்தோக்கியஉபநிஷத்து அடியில் வருமாறு சித்தாந்தப்படுத்துகிறது.

வாசாரம்பணம்விகாரோ நாமதேயம்ம்ருத்திகேத்யேவஸத்யம்॥

இக்கருத்தினையே, திருமூலரும் திரோபாவத்தைப்பற்றிச் சொல்லுமிடத்து அடியில்வருமாறு உபதேசிக்கின்றார்.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உன்நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ஒன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகிநின் றானே.

யோனிகள் - சரீரபேதங்கள். அண்ணல் - ஈசுவரன்.

குறிப்பு:—மேற்கண்ட பாசுரங்களின்அர்த்தம், சமீபகாலத்தில் ரிப்பன்பிரஸில் அச்சாகிவருகின்ற புத்தகத்தினின்று எடுத்து இதில் உபயோகிக்கப்பெற்றுள்ளது.

சிவராமசுப்பிரமணியன்.

# மானுடசரீரம்.

ஈசுவரனால் சிருட்டிக்கப்பட்டுள்ள தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, ஸ்தாவரம் எனப் பகுக்கப்பட்டுள்ள எழுவகைத் தோற்றங்களுள், மக்கள் என்று சொல்லக்கூடிய மானுட சரீரமே உத்தமமானது. எப்படியெனில் மனிதன் என்ற பதத்தை விசாரிக்குங்கால் "மன்" என்ற தாதுவினிடமாகப் பிறந்ததென்று கேட்கப்படுகிறது. "மன்" என்றால் நிலேத்த என்றர்த்தம். *அந்த நிலேத்த என்னும் விசேஷணம் எதுபற்றிக் கூறியது எனில், சரீரத்தை முன்னிட்டுக் கூறியிருக்கலாமோ எனில் சரீரம் நிலேத்ததென்பதை ஓர் உலோகாயதனும்கூடக் கூறமாட்டான். அப்படியானல் சுரோத்திர (காது) முதலிய இந்திரியக் கூட்டங்களைப்பற்றிக்கூறியிருக்கலாமோவெனில் அவ்விந்திரியங்கள் அந்தக்கரணம், பிராணனின்றி இயங்கா. அவைகளில்லாதவிடத்து இந்திரியங்கள் ஜடமும், அஸ்திரமுமாம். அப்படியானல் அந்தக்கரணத்தை முன்னிட்டுக் கூறிபிருக்கலாமோவெனில் அவ்வந்தக்கரணம் விருத்திரூபமும், க்ஷணிகமுமாம். யாதொன்று க்ஷணிகமோ அதை நிலேத்ததெனக் கூறுதல் அசம்பாவிதம். அப்படியானல் பிராணன்மேல்வற்றிக் கூறியிருக்கலாமோவெனில், அதுவும் உச்சுவாச, நிச்சுவாசக் கிரியையோடு கூடியதும், ஜீவன் (காம கர்மங்களோடு கூடிய சூக்ஷ்மசரீரமானது) பிரியுங்காலத்து பிராணக்கிரியைகள் காணப்படாதனவுமாயிருக்கின்றன. ஆதலால் நிலேத்த சுபாவத்தைப் பிராணனிலும், அறியமார்க்கமில்லே. அன்றியும், மேற்கூறப்பட்ட சரீரம், இந்திரியம், அந்தக்கரணம், பிராணன் இவைகள் சர்வஜீவ ராசிகட்கும் சாதாரணமாய்ப் பொதுவாய் அமைந்துள்ளன. அதுபற்றி எல்லா ஜீவராசிகளேயும் மனிதன் என்று சொல்லவேண்டும். அவ்விதமோ இல்லே. ஆகவே நிலேத்த என்னும் விசேஷணம் எதுபற்றிக் கூறியிருக்கலாம் என்பதை சற்று அமைந்து ஆலோசிக்குங்கால், அறிவின் கண்ணே யே கூறுவதுதான் உசிதம் என்று ஏற்படுகிறது. அவ்வித அறிவும் பகிர்முக அறிவு, அந்தர்முக அறிவு என இருதிறத்தது. இதில்முத

---

* மந் - அறிதல் என்று சாதாரணமாய் பொருள் கொள்ளலாம். ப-ர்.

லாவதான பகிர்முக அறிவாவது, எந்த நுட்பமான விஷயங்களையும் அறிதற்கு சாதாரணமாயுள்ள அந்தக்கரணத்தை (விருத்தியை) இந்திரியவாயிலாக (சுரோத்திரம், தொக்கு, சக்ஷு, சிங்நுவை, ஆக்கிருணம்) வெளியேசெலுத்தி சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தரூபமான பஞ்ச விஷயங்களை அனுபவிப்பதும் அவற்றை அறிவதுமாகும். இந்தப் பகிர்முக அறிவும் சகல பிராணிகட்கும் பொதுவாயும், ஒருகால் அனுபவித்த அனுபவம், அவற்றினறிவு மற்றொருகால் அனுபவிக்கவாவது அறியவாவது மார்க்கமில்லாமலுமிருக்கிறது. ஏன் எனில் பதார்த்தங்கள் நிமிஷந்தோறும் மாறிக்கொண்டே வருவதால், பதார்த்த அனுபவமும், அப்பதார்த்தத்தி னாகாரத்தை யடைந்த மனோ விருத்தி ரூப சிற்றறிவும் க்ஷணிகமாதலால், அவ்வறிவும் அடுத்தநிமிஷத்தில் இல்லையென்று கூறப்படுகிறது. ஆகவே பகிர்முக அறிவை முன்னிட்டும் நிலைத்த என்னும் விசேஷணம் கூற மார்க்கமில்லை.

2. இரண்டாவதான அந்தர்முக அறிவாவது, மேற் கூறப்பட்டுள்ள பஞ்ச விஷயங்களையும் அவற்றின் அனுபவங்களையும் நிலையில்லாதது எனக்கண்டும், பூர்வம் இவைகள் நிலையுள்ளதுபோற் தோற்றியதற்கு, இதற்கு அன்னியமாய் நிலையாயுள்ள ஓர் வஸ்து இருக்கவேண்டுமென்றும், அதின் சம்பந்தத்தாலேயே பஞ்ச விஷயங்களும் நிலையாயுள்ள பதார்த்தம்போல் தோற்றியதென்றும், உணர்ந்து, அதற்கான குரு, சாஸ்திரம், அனுபவம் இவைகளைச் சம்பாதித்து அந்த என்றும் நிலையாயுள்ள வஸ்துவின் அபரோக்ஷ (பிரத்தியட்ச) ஞானத்தால் அவ்வடிவாக நிலைத்தஅறிவே அந்தர்முக அறிவு என்றும், அதையே நிலைத்த அறிவு என்றும் கூறப்படும். அப்படியே அது சித்திப்பதற்கேதுவாயுள்ள மானிடசரீரத்தை நிலைத்த அறிவோடு கூடியது என்றும், அதுபற்றியே மனிதன் என்றும் கூறவேண்டியதாயிற்று. இவ்விதம் அறிவின் கண்ணுள்ள இவ்விசேஷணத்தை, விளக்கிருக்குமிடத்தையும் விளக்கு என்றாற்போல, அவ்வித நிலைத்த அறிவுக்கு சாதனமாயிருக்கும் ஸ்தூல சரீரத்தினிடத்தும் உபசாரத்தால் மனித சரீரம் என்று கூறப்பட்டது.

அதுபற்றியே "மக்கள்தாமேஆறறிவுயிரே" எனத்தொல்காப்பியனாரும், "மக்களே இம்மைப்பயன், மறுமைப்பயன், வீட்டின்தன்

ணம் இம்மூன்றனையும் அறிதற்குரியவர்களா யிருத்தல்பற்றி உத்தம சாதி'' எனப் பிறநூலாசிரியரும்,

''எறியுங்கடலினுகத்துளையுள்ளாமைக்கழுத்துப்புகுவதுபோல்
பொறிவெம்பிறவியினைகத்தால்புருடன்விவேகியெனப்பிறந்து!''

என வசிஷ்டரும் கூறியிருப்பது காண்க.

3. அன்றியும் சரீரம் என்ற சப்தத்தாலும் க்ஷீணிக்கும் சுபாவமுடையது எனப் பொருள்படுதலால் நிலைத்த என்னும் விசேஷணம் கேவலம் சரீரத்திற்கு உரித்தானதல்ல என்பது நன்கு நிர்மானிக்கப்படுகிறது. இவ்வித விசாரணையால், மனிதன், புருடன் என்னும் சப்தங்கள் அறிவையே லக்ஷியப்படுத்துவதாயிருக்க, அதற்கான முயற்சி ஒன்றும் எடுக்காமல், கேவல சரீரம் பெற்றதினுலேயே புருடார்த்தம் சித்தித்துவிட்டதெனக் கருதி, வாணளை வீணுளாகக் கழிக்கின்றுர்கள். அந்தோ! இவர்களுடைய வாணுள்மிகவும் நிகிருஷ்டமான கிருமிகீடாதிகளின் வாணளைவிட தாழ்ந்தவையாயிருக்க, அதை உணராது திரிகின்றுர்கள் என்பதைக் கருதியே நம் தாயுமானஸ்வாமிகளும், ''புருடர்வடிவானதே யல்லாது புருடார்த்தமேதுமில்லேன்'' என்றுர்.

4. இன்னும் உலகில் சிலர் தாங்கள் நுட்பமான புத்தியால் அநேக ஆராய்ச்சிசெய்து வெளிப்படுத்திய சில விஷயங்களினுல் திருப்தியடைந்து, இறுமாப்படைகிருர்கள். அதுவும் சரியல்ல. அதுவே புருடார்த்தமுமல்ல. உலகில் ஒவ்வொரு ஜீவராசிக்கும் ஒவ்வொன்று எளிதாயும், மதினுட்பமுள்ள ஏனைய மானிட சரீரம் பெற்றவர்களாலும் வியக்கத்தக்கதாயும், செய்யமுடியாததாயுமிருக்கிறது. அதில் இறுமாப்படைவது சரியல்ல என்னும் அபிப்பிராயத்தாலேயே,

''வான்குருவியின் கூடு, வல்லரக்கு, தொல்கரையான்,
தேன்,சிலம்பி, யாவர்க்கும் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிசொல வேண்டாங்காண்.
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.''

எனப் பிறரும் சொல்லியிருக்கின்றுர்கள்.

5. ஆகவே அநாத்மசம்பந்தமான ஒவ்வோர் அதிநுட்பமான விஷயங்களில் ஒவ்வோர் ஜீவராசிகட்கு எளிதான தன்மையிருப்பதால், சரீராதி அவயவங்கள், ஆகாராதிகள், காமக்குரோதாதிவிருத்திகள், விஷயாதிசுகங்கள், தாபத்திரயாதி துக்கங்கள், மதி நுட்பமாந்தன்மைகளாகிய இத்தியாதி விவகாரங்களில் ஒன்றற்கொன்று ஏற்றதாழ்ச்சி சொல்ல ஏதுவில்லை. சர்வஜீவராசிகளும் சமமே. ஆகையினலே மேற்குறிக்கப்பட்டுள்ள அநாத்ம சம்பந்தத்தை விட்டு அந்தர்முக அறிவுக்குச் சாதகமாய் ஆத்மசம்பந்தமாயுள்ள ஜீவகாருண்ணிய கர்மம், பக்தி, சாதனசதுஷ்டயம், சற்குருசேவை, சிரவணம், மனனம், நிதித்தியாஸனம், ஈசுவர சாக்ஷாத்காரம் இவைகளை ஒவ்வொரு புருஷனும் அடைந்து புருஷன், மனிதன், என்பதன் அர்த்தந்தைத் தன்னிடத்தில் காட்டி உலகத்தையும் அவ்விதமே ரமிக்கச் செய்துவைக்கும்படி திருவருள் பிரார்த்திக்கப்படுகிறது. இவ்வாறு மானிடசரீர அர்த்தம் விசாரிக்கப்பட்டது.

இசக்கியாடும்பெருமாள்.

---

## நன்மொழி.

42 பலதுளி பெருவெள்ளம்; பலநிமிஷம் ஒருவருஷம்: பல செங்கல் ஒரு அரண்மனை; பலஉளி முனையின் செயல் ஒரு கல்மண்டபம். ஆலின்பழத்தின் நுண்ணிய சிறுவிதை பெரிய விரிவான ஆலாவிருக்ஷமாக உண்டாதலைப்பார்.

43 இரண்டு புள்ளிகளுக்கு மத்தியில் ஒரு நேர்கோடுதான் இழுக்கலாம். ஆனல் கோணலான கோடுகள் பல, கணக்கில்லை. அவ்விதமே உலகவாழ்வில் நேர்வழி ஒன்றே, அதுவே சத்தியம்பற்றிய வழி. மற்றவழிகள் கோணல்வழிகள். அவை பலவாம். அவை அசத்திய வழிகளாம்.

44 ஈசுவரபக்தி சாந்தம் பயக்கும். நம்முள்ளம் சாந்தம் பெறின், உலகெல்லாம் சாந்தமாக அமையும்.

## மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது.

### 2-ம் அதிகாரம்.

### ஒரு பிரஹ்மாண்டத்தில் ஈசுவரன் பிரசந்நமாதல்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 19 JAN 1911 MADRAS.

---

எல்லாமத கிரந்தங்களிலும், ஈசுவரன் தம்சுபாவத்தில் அவியக்தமாக இருக்கும் நிலைமைக்கும், ஈசுவரன் விபக்தமாக இருக்கும் நிலைமைக்கும், வித்தியாசத்தைச்சொல்வதுண்டு. ஆனால் சமயம் என்று சொல்லப்படும் அளவில், இவ்வித்தியாசம் முக்கியமாகப்பாராட்டபடுகிறதன்று; சமயத்தின் முக்கியமான நோக்கம் எல்லாம் ஈசுவரனை சாக்ஷாத்கரித்தலும், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ளசம்பந்தமுறையை அறிதலுமாம்.. பரமதத்துவங்களைப்பற்றிய நுண்ணிய தர்க்க விசாரணையில், அதற்கு அவ்வளவு முக்கியநோக்கமன்றும். தத்துவங்களைப் பற்றிய நுண்ணிய தர்க்கவிசாரணை, விஞ்ஞானப்பயிற்சியினால் ஏற்படுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு மூளை அபிவிருத்தியடைகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு, இவ்விதமானதத்துவங்களைப்பற்றிய , ஆராய்ச்சிவிரிகிறது, பெருகுகிறது. சமயமுறையின் உத்தேசமெல்லாம் ஹிருதயம் கனிந்து குவிதலும் பிரியமுள்ள பரவஸ்துவைக்காணுதலும், கண்டதின்மேல் அதன்பால் அன்புபாராட்டலும் போற்றலுமேயாம். தத்துவவாதம் அதற்கு வேண்டற்பாலதன்று. "ஜீவாத்மாவின் கண்ணுள்ள பரமாத்மா என்ற நாதம் ஒன்றே" அந்நாதம் ஜீவாத்மாவுடன் உரையாடலுக்கு தத்துவ ஆராய்ச்சியும் தர்க்கவிசாரணையும் வேண்டற்பாலனவல்ல. *

2. ஆனால் மதங்களுள், எப்போதும், தத்துவஆராய்ச்சியைப் பற்றிய கிரந்தங்களிருந்திருக்கின்றன. அவைகளில் ஆழ்ந்த அகன்ற உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வுபதேசமுறைகள் விஞ்ஞானத்திற்குக் கோசரமாகக் கொண்டுவரப்படுகின்றன. ஆனால்சொல்லுகிறகுருவையும் அந்தந்தமதங்களையும்பற்றிவித்தியாசப்படுகின்றன. தத்துவங்களைப்பற்றிஉண்மையில்விவாதம் ஏற்படாது. ஆனால், அத்தத்துவங்கள் 'உரை உணர்வு' கடந்தவைகளாகையால்,

---

* "சாத்திரமோதுஞ் சதிர்களை விட்டுநீர்,
மாத்திரைப்பொழுது மறித்து உள்ளே நோக்குமின்"
என்ற திருமூலர் வசனம் இங்கு கவனிக்கத்தக்கது.

அவைகள் உரைக்கப் படுங்கால், பூர்ணமாய் வெளிப்படுத்த இப லாவாம். இக்காரணம்பற்றி, அவைகளை வெளிப்படுத்தும் வார்த் தையின் திறமைக்குறைவால் வாதங்களும் தர்க்கங்களும் நிகழ்கின் றன. 'ஆத்மா ஒன்றே' அதை மனிதனின் விஞ்ஞானம் பலவாறாக சங்கற்பிக்கிறது. அது உண்மையானவெள்ளொளிபோல ஒன்றாயும், அவ்வெள்ளொளியானது முக்கோணஸ்படிகத்தின் மூலமாய்ப் புகுந் து பகுக்கப்பெறின் நானாவித வித்தியாசமான வர்ணங்கள் உள்ள தாயும் தோன்றுமாறுபோல், ஒன்றானஉண்மை விஞ்ஞானப்பார்வை யினால், பலவிதமாக இருக்கின்றமைபோலக்காணும்.

3. இந்தன்மையான தத்துவங்களில் (உண்மைகளில்) ஒருபிர ஹ்மாண்டத்தில் ஈசுவரன் தாமேபிரசன்னமாதல், அதாவது வியக்தப் படுதல் என்பது ஒன்றாம்; தத்வதர்சிகளின் ஆழ்ந்த ஆராய்ச்சியில் இவ்வியக்தப்படுதல் முப்பான்மையதாகத் தோன்றும். ஈசுவரன் மூ ன்று ஸ்வரூபங்களாகத் தோன்றிடுவர்; அவை மூன்று அவஸ்தைக ளாம். தாம் ஏற்படுத்தும் பிரஹ்மாண்டத்தின் நிகழவேண்டும் தொழில் முறைகளை நோக்கமாய் மூன்று குணங்களையுடையராய்த் தோன்றுவர். இதனால்தான் பராசீனநவீனமான அநேக மதங்க ளில், திரிமூர்த்திகளின் பிரஸ்தாபம் வருகின்றது. முகம்மதிய மதத்தில், இந்த பிரஸ்தாபம் முற்றும் மறுக்கப்படுகிறது. ஏனெ ன்றால், முகம்மது நபி அவதாரமானகாலத்தில், அநேக தேவதைக ளின் ஆராதனைகளின் குழப்பத்தில், 'கடவுள் ஒருவர் உளர்' என்ற தத்துவமானது முற்றும் மங்கியும் மறைந்தும்போய் விட்டதும் தவிர, கடவுளை மும்மூர்த்தியாகப் பாவித்ததில், மனிதசுபாவத்தை யும் தன்மையையும் அவர்பால் ஆரோபித்து, அந்த உயர்தரதத்து வத்தைக் கீழ்க்கடையாகச் சாதாரணங்கள் செய்துபோட்டார்கள். அதனால், முகம்மதுநபி திரும்பவும் 'கடவுள் ஒருவர் உளர்' என்ற தத்துவத்தை மனிதர்கள் மனத்தில் பதியவைக்க வேண்டுமெனக் கருத்துள்ளவராய், திரிமூர்த்தி விஷயத்தை மறுத்துவிட்டார். ஆனால் உள்ளபடியாக, அறிவுள்ளார் இவ்வேதார்த்தமான விஷயத் திற்கு ஆக்ஷேபணைசெய்யார். இத்திருமூர்த்தி தத்துவத்தைப்பற் றி அறிவில்லாத சாமான்ய ஜனங்களின் கொள்கையானது, பக்தி யுள்ளதாக இருந்தாலும் ஞானியைக்கோபமூட்டும் படியான அவ்வ ளவு சிங்காரரஸத்தில் மூழ்கினதாக நிகழும்.

4. ஹிந்துக்கள் அவ்வியக்தமான கடவுளை, அகண்டமாய், கேவலமாய், விகாரமற்றதாய், நிர்க்குணமாய், சுவாபாவிகமாய், உள்ள வஸ்து என்பார். வியக்தப்பட்ட கடவுளை, பரமேசுவரனென்றும், ஸகுணபிரஹ்மமென்றும், சொல்லுவார். ஸகுணம் - குணமுடைமை. குணம் - என்றால், ஸத், சித், ஆநந்தம் என்பவையாம். ஜீவாத்மா என்றால், பரமாத்மாவான, ஈசுவரனின் பிரதிபிம்பம் - சாயை; ஆகவே அம்முக்குணங்களின் பிரதிபிம்பங்களான, கிரியை, இச்சை, ஞானம், என்ற முக்குணங்கள் ஜீவாத்மாவின்கண் தோன்றுகின்றன. ஜோராஸ்தர் மதகிரந்தத்தில் ஈசுவரன் மற்றக்குணங்களுடன், நான் இருக்கிறேன், என்ற தன்மையையும், ஞானமும் ஆநந்தமும் உடையராக உபதேசித்துள்ளது. யூதர்கள் "மனிதன், கடவுள் ரூபமாக, சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றான்" என்கிறார்கள்; அவர்களுடைய குப்தமான ரகஸ்யகிரந்தங்களில் முகம்மதுநபி எக்காரணத்தினால், இந்தத்தத்துவத்தை சாதாரண ஜனங்களுக்கு வேண்டாமென்று மறைத்தாரோ, அக்காரணத்தினால், சாதாரணஜனங்களுக்கு யூதர்கள் மதத்தில், இந்தத்தத்துவம் மறைக்கப்பட்டுள்ளது. அவ்வியக்தமான ஒன்றே, மூன்று தன்மைகள் உடையதாக வெளித்தோன்றுகிறது. (1) கெபர் (Kepher) அதாவது சிகரம், ஆநந்தாம்சம். இதுவே ஜீவாத்மாவின் ஞானத்தின் கரு, (2) பினு (Binah) சித்தாம்சம், ஜீவாத்மாவின் இச்சையின்கரு, (3) சோக்மா (Chockma) மஹத், அல்லது சத்தாம்சம், ஜீவாத்மாவின், கிரியையின்கரு. இதுதான் மும்மூர்த்தி என்ற விஷயத்தின் மூலதத்துவம். அது மூன்றாகப் பகுக்கப்படுங்கால், ஒவ்வொன்றுக்கும், பலமதங்களில், பலபெயர்களுண்டு; கிறீஸ்து மதத்தில் பிதா, புத்திரன், பரிசுத்தஆவி என்றும், ஹிந்துமதத்தில், சிவ, விஷ்ணு, பிரஹ்மா என்றும், சீனர்களுடையவும் திப்பெத்தியர்களுடையவும் பௌத்த ஸம்பிரதாயங்களில், அமிதபா, (Amitabha) அவலோகிதீசுவரர், (Avalokiteshvara) மஞ்ஜுஸ்ரி, (Manjusri) என்றும், ஜோராஸ்தர்மதத்தில், அஹுர்மாழ்டா (Ahur Mazda) ஸ்பென்டோ அங்கரோ மைனியுஷ், (Spento, Angro, Mainyush), ஆர்மேய்தி (Armaiti) என்றும், முகம்மது மதத்தில், மஹாபலவான், மஹாஞானவான், மஹாகாருண்யவான், என்றும் இப்போது மறைந்துபோன எகிப்திய, கா

ல்டிய, முதலான மதங்களில், இம்மும்மூர்த்திகளின் பிரஸ்தாபங்களும் இருக்கின்றன. ஈசுவரன் பிரபஞ்சத்தில், முப்பான்மையாகத் தோன்றுகிறார்; அவர் சிருஷ்டியிலும் முப்பான்மையாகவே விளங்குகின்றார். ஈசுவரனின் மூன்று அம்சங்களும், பிரஹ்மாண்டத்தின் ஜீவர்களால், மூன்று மூர்த்திகளாக மதிக்கப்படுகின்றன; * கிறீஸ்துவர்களின் பெயர்போன உபதேசம், "மூன்றுமூர்த்திகளாயினும் கடவுள் ஒன்றே". மேற்கண்ட திரிமூர்த்தி என்ற விஷயத்தின் அந்தர்கதமாயுள்ளதும், இறந்த, நிகழ்கின்ற வருகின்ற பிரபஞ்சங்களுக்கு என்றும் பொருத்தமுள்ளதுமான (பிரபஞ்சம், என்றால் காலதேசங்கள் என்றவரம்புக்குட்பட்ட ஈசுவரனின் சின்மாத்திரையின் வெளித்தோற்றம்) தத்துவம் (உண்மை) யாதெனில், ஆத்மா ஒன்றே உளது; பிரபஞ்சம் என்பது, அநாத்ம—அதாவது, ஆத்மாவின் சின்மாத்திரையான சிந்தனை அதாவது ஸங்கல்பம்; ஆத்மாவான சிந்திக்கிறவருக்கும், சிந்தனைக்கும் உள்ள சம்பந்தத்தால்தான் சங்கல்பம் நிகழ்கின்றது, பலவத்தாகிறது, தொழிற்படுகின்றது.

5. அறிவின் ஆராய்ச்சிமுறையில். இந்தத் திரிமூர்த்தித்தன்மையை, இம்முப்பான்மையை, சிருஷ்டியில், தவிர்க்கமுடியாதென அறிகிறோம். இந்த மூலதத்துவம், பலவாறாகத்தோன்றுகிறது. ஞானமாகவும், ஸ்தூலமாகவும், மறைபொருளாகவும், மனிதஸம்பிரதாய முறையாகவும் இத்தத்துவமானது பிரஸ்தாபிக்கப்படுகின்றது. பிரஸ்தாபங்கள் பலவாறாக இருப்பினும் அவைகளுள் அடங்கிய உண்மை ஒன்றே. இது நம்முடைய சிருஷ்டிமுறையில் இன்றியமையாததர்மமாக இணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையாக யோஜிக்குமிடத்து, இந்தத்தத்துவத்தை ஒருகாலும் மறுக்கமுடியாது. எங்கே பார்த்தாலும் இதைக்காண்போம்.

6. வியக்தப்படும் கடவுளே, அதாவது ஈசுவரனே பிரபஞ்சத்தின், அதாவது பிரஹ்மாண்டத்தின் மூலமாம். சிலா பிரபஞ்ச

---

* ஆதிபிரானும், அணிமணி வண்ணனும்
ஆதிக்கமலத்து அமர்ந்திருப்பானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே.—திருமந்திரம்.

த்தை, ஈசுவரனின்று விகாசம் பெற்றதென்பார்; சிலர் சிருஷ்டிஎன்பார். எப்படிச்சொன்னாலும் சரி, "அவனன்றி ஒன்றில்லை" என்பதுதான் முக்கியமான விஷயம். அவர், எவ்விதமாக, எம்முறையாக, பிரபஞ்சத்திற்கு ஸ்வரூபத்தைக்கொடுக்கின்றார் என்ற விஷயம் கௌணமானது. ஸ்வரூபப் படுத்துகின்றவரும், நிர்மாணம் செய்கின்றவரும், விசுவகர்மாவும், அவரே. அவர் பிராணனை கர்ப்பத்தினின்று இப்பிரபஞ்சம் உண்டாகிறது. அவர்பிராணனே இப்பிரபஞ்சத்தை,உள்ளளவும், மன்வந்தரகாலம் முழுமையும், தரிக்கின்றது. இப்பிரபஞ்சம் ஒடுங்குங்காலத்தில் அதாவது பிரளயத்தில், அவரிடம் ஒடுங்குகின்றது. அப்போது எல்லாவற்றுக்கும் அந்தம் ஏற்படுகிறது. "எல்லாம் ஈசுவரனுகவே இருக்கின்றன" * முகம்மதியர் சொல்லுகிறபடி. "எல்லாம் அழிகின்றன. அவர்முகம் ஒன்றே நிலைத்துள்ளது" †

7. ஒருபிரஹ்மாண்டத்தைச்சிருஷ்டித்தலும், அதற்கு தம்முடைய சத்என்ற ‡ இறுத்தல் தன்மையின் ஒரு அம்சத்தை அளித்தலும், அதனுள் தம்முடைய இறுத்தல் என்ற தன்மையின் ஓர் அம்சத்தை வைத்தலும், ஈசுவரனின் மூன்று அம்சங்களில், மூன்றும் அம்சத்தின் காரியமாம். "ஈசுவரனின் பரிசுத்த ஆவி (சக்தி) ஜலங்களின்மேல் சலசித்தது" என்று ¶ யூதரும், "பிரஹ்மாசிருஷ்டிகர்த்தர், உலகங்களுக்கு எல்லாம் பிதாமகர்" என்று || ஹிந்துவும், "அந்தப்பிரபு சிருஷ்டிகர்த்தர், அவர்நாமம், அமூர்த்தமாகஇருந்து வியக்த்தப்படுத்து கிறவர், ஈசுரன்" என்று $ ஜோராஸ்தர் மதஸ்தரும், "இந்தக்கடவுள் உங்களுடைய பிரபு. எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறவர்" என்று § முகம்மதியரும் சொல்லுகின்றார்கள்.

---

* Corinthians chap. xv 24-28

† கொரான் xxviii 88

‡ இறைவன் என்ற பதத்தின் உண்மையான தத்துவம் இறுத்தல் தன்மையன்-என்பதாம்.

¶ Genesis I 2

|| மனுஸ்மிருதி I 9.

$ Kordeh Avesta

§ Al Koran vi 102

கடவுள், எல்லாஜீவராசிகளுக்கும் ஆதிமூலமென்பதிலும், இருக்கின்றவையாவும் அவரால்தான் இருக்கின்றன என்பதிலும், மதங்களுக்குள், யாதொரு விவாதம் இல்லை. ஈசுவரனின் மூன்றும் அம்சம் இப்பிரபஞ்சமாக வியக்தப்படுகின்றது. கிறீஸ்துவர், மூன்றும் அம்சம் என்பதற்கு பதிலாக, "மூன்றும் புருஷன்" என்பார்.

8. அவர் உலகங்களைத் தாங்குகிறவர், காப்பவர். இத்தொழில் அவருடைய இரண்டாம் 'அம்சம்,' இரண்டாம் புருஷ னுடையது. "எல்லாவற்றையும் பற்றி அவர் கவலை யுடையவர், காப்பவர்" என்று * முகமதியரும் "இப்பிரபஞ்சம் அவரால் தாங்கப்படுகிறதென்று" † ஹிந்துவும், சொல்லுகிறார்கள். "இறைவன் தாம்சிருஷ்டித்த பிரபஞ்சத்தில் என்றும் பிரசன்னமாக இருக்கிறார், அதை நடத்துகின்றார், அதை ஆளுகின்றார், அதை ஏவுகின்றார்" என யூதர்மத கிரந்தங்கள் ‡ முறையிடுகின்றன. பிரபஞ்சம் சங்கோசம் பெறுங்காலத்தில், அதாவது, பிரளயகாலத்தில், ஈசுவரன் தம்மிடமிருந்து, வெளியேறின தேவாத்ம சக்திகளை உள்ளே தாமே இழுத்துக் கொள்ளுகிறார். ஜோராஸ்த்தருக்கு அஹுர்மாஜ்டர் உபதேசிக்கிறதாவது. "எல்லாவற்றையும் ஸம்ஹாரம் செய்பவன், என்பது என்பெயர்." அரேபியாவின் தீர்க்கதர்சியான முகம்மது நபி சொல்லுகிறதாவது "உன்னுடைய கடவுளிடம் எல்லாம் முடிவைப் பெறுகின்றன." "எல்லாவஸ்துக்களும் ஈசுவரனை நோக்கித் திரும்புகின்றன." $ ஹிந்துக்கள் மதத்தில் "சிவன் நாமரூப பிரபஞ்சத்தை ஸம்ஹரிக்கும் மூர்த்தி, ஜீவர்களை பாசங்களினின்று விடுவிக்கிறவர், மோக்ஷதாதா. அந்தத்தில் சாந்தத்தையும் ஆநந்தத்தையும் கொடுப்பவர்." இவ்விதமாக, ஈசுவரன் ஒருவரே, சிருஷ்டித்தொழிலால், பிரஹ்மா வென்றும், இரக்ஷிக்கும் தொழிலால், விஷ்ணு வென்றும், ஸம்ஹரிக்கும் தொழிலால், சிவன் என்றும் பெயர் பெறுவர். ¶

---

* Al Koran vi 102.

† பகவத் கீதை. vii 5.

‡ Psalms 104. 147.

$ Al Koran ii 157. L iii 43. L. vii 5.

¶ விஷ்ணு புராணம். 1 ii 62.

9. பிரபஞ்சத்தின் சம்பந்தமுறையில், ஈசுவரன் இம்மூன்று அம்சங்கள் உடையவர். இந்தத்தத்துவ மானது, ஒரே ஈசுவரனே, மும் மூர்த்திகளாக ஸ்வரூபப்படுத்தப் பெற்று நடைபெறுகின்றது. ஒரேமனிதன், உறமுறையில், ஒருத்திக்குப் புருஷனாகவும், குழந்தைகளுக்குப் பிதாவாகவும், வேலைக்காரர்களுக்கு எஜமானனாகவும் இருக்கின்றமைபோல, ஒரே ஈசுவரன், சிருஷ்டிகர்த்தராகவும், ரக்ஷகராகவும், ஸம்ஹார கர்த்தராகவும், மூன்று தொழில்களால், மூவர்போல் தோன்றுகிறார். கருதப்படுகிறார், அவர், நம்மாத்துமாக்களின் பிதா, நம்உயிர்களின் ரக்ஷகர், நம்கிரியைகளுக்கு ஆதாரமானவர். நம்மைப்பலர்களாகக்கருதும் காலத்தில், அதாவது விவகார தசையில் இத்தன்மையான சம்பந்தங்களை அவர்பால் ஏற்றுகிறோம்; பரமார்த்த தசையில், நம் அந்தராத்மா அவரென்று மெய்யுணர்வால் அறிகிறோம்.

ப. நா.] [இன்னும் வரும்] [A. B.

---

## நன்மொழி.

45. பயம் கொள்ளற்க. ஆராயில் பயம் என்பது துர் அபிமானத்தின் அறிகுறி. பற்றில்லானுக்கு பயமில்லை. வேண்டுதல்வேண்டாமை இலானுக்கு யாண்டும் இடும்பை இல. என்பது ஆன்றோர் வாக்கு.

46. பயம்உண்டாயில், கவலைஉண்டாம். கவலை மனக்கிலேசத்தை விளைவிக்கும், கிலேசமுண்டாகவே, சுகம் போம், வாழ்நாள் தீராத்துயரமாக முடியும்.

47. உண்மை வழியில் நடைபெற்றோமானால் மெய்யுணர்வு பெறலாம்.

48. வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினன் சொன்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று. (பொய்கை ஆழ்வார்.)

## ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர்.

(148-ம் பக்கத் தொடர்ச்சி.)

11. கருவூருக்குச் சமீப்மான ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் தன் வயலில் விளைந்த நெல்லையறுத்து, களத்திற் சேர்த்து அடித்துத் தூற்றி ராசியாகக்குவிக்க, மாலைப்பொழுது ஆனதைக் கண்டு, மறுநாட்காலையில் அளந்துகொள்ளலாமென்று தீர்மானித்துக் குறிபோட்டுச் சில ஆட்களைக் காவல்வைத்துத் தன் இல்லத்துக் கேகினன். அக்காவலாட்கள் தண்டங் கையிற்கொண்டவராக நாலாபக்கங்களிலும் காத்துக்கொண்டிருக்குங்காலையில், நள்ளிரவில் தன்னந்தனியே உலாவித்திரிந்துகொண்டிருந்த நம் மகான் அவ்விடஞ் சென்று அத் தானியக்குவியல்மீது சாய்ந்து படுக்கவே, உடனே காவலாட்கள் அவரைத் திருடன் என்றெண்ணிப்பிடித்து அடிப்பதற்குக் கைகளிலிருந்த தடிகளை ஓங்கிக்கொண்டு சமீபத்தில் வரவே, அக்காவலாளர் ஒன்றுந் தோன்றாமல் மயங்கி ஓங்கின கைகளுந் தடிகளுமாக மறுநாள் விடிந்து ஐந்துநாழிகை வரையிலும் நின்றுகொண்டேயிருந்தார்கள். அவர்கள் யஜமான் மறுநாள் காலையில் தூரத்தில் வரும்பொழுதே இவ்வாச்சரியத்தைக்கண்டு சமீபித்து இஃதென்னவென்று கேட்க, அம் மகான் நள்ளிருளில் நெற்குவியலில் வந்து விழுந்ததும் தாங்கள் தடிகளை யோங்கினதும் மட்டும் தங்கள் நினைவிலிருக்கிறதென்றும் பின் யாதொன்றும் தோன்றவில்லை யென்றுங் கூறினார்கள். அவ்வழியே சென்ற ஜனங்கள் அனைவரும் இவ்வற்புதத்தைக்கண்டு ஆச்சரியமுற்று ஒருவருக்கொருவர் பலவிதமாக அளவளாவிக்கொண்டு நிற்கையில், அவர்களது சந்தடியால் நம் மகான் நிஷ்டை கலைந்து எழுந்து மௌனமாகச் சென்றார்களாம். பின் காவலாட்களுக்கெல்லாம் கைகால்கள் சுவாதீனப்பட்டன. அவர்களுக்குப்பின் தெளிவும் பிரஞ்ஞையும் உண்டாகி நம்மகானது மகிமையைக் கொண்டாடினார்கள்.

12 பின்னாட் சென்றபின்னர் நம் மகான் திருநெல்வேலிக்குச்சென்று உலாவித்திரிந்தனர். அக்காலத்தில் அவ்வூர் அதிகாரி நாயக்கர் சேனைக்குப்புல்லும்விறகும் சேகரித்து அனுப்பிவந்தான். ஒருசுமைக்கு ஆள்வேண்டிவந்தது. அச்சமயத்தில் நம் மஹான் பைத்தியக்கா

ரர்போல் ஒரு மூலையில் தங்கியிருந்தார். அவன் அச்சுமையை அவரது தலையில் ஏற்றி அனுப்ப நினைந்து அவரைச் சமீபிக்கவே அவர்அரையில் துணியில்லாதது கண்டு உடனே ஒரு துணியை அவரது அரையிற் சுற்றி ஒரு விறகுச் சுமையை அவர் தலையில் வைத்து மற்றைச் சுமையாட்களோடு ஆளாக அனுப்பினன். நம் மகானும் அவ்வாட்களுடன் சுமையெடுத்துச் சென்றனர். குறித்த இடம் போய்ச் சேர்ந்தபின்னர் எல்லோரும் தத்தம் சுமையைப் போட்ட பின்பு கடைசியாய் நம் மகானும் தம்சுமையைப் போட்டனர். உடனே எல்லா விறகும் குபீரென்று தீப்பற்றிவெந்து நீறுயின. பிரம்ம தேஜஸ் அக்கினியினும் கொடிய வெப்பமுடையதன்றோ. எல்லோரும் இம்மகானுடைய மகிமையை அறிந்து கொண்டாடினார்கள்.

13. அங்கிருந்து நம் மகான் திருச்செந்தூருக்குச்சென்று சில காலம் வாழ்ந்தனர். அக்காலத்தில் வேளாளப்பிரபு ஒருவனுடைய பெண் கல்யாணம் செய்த ஐந்தாம்நாள் புஷ்பவதி ஆனுள். பழவினைப்பயனுல் அவ்விடத்திலேயே அரவுதீண்டி மரணமடைந்தனள். அதனைக்கண்ட உற்றார் பெற்றூர் எல்லாருங்கூடி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கோவென்றுகதறுங்கால், அவ்வழுகோசையைக்கேட்ட நம் மகான் கருணைகூர்ந்து எழுந்து அவ்விடத்தருகுவந்து அப்பெண்ணின் பிணத்தைத் தமது மலர்ந்த கரங்களால் தடவிக்கொடுக்க விஷம் நீங்கி அப்பெண்ணும் தூங்கி எழுபவள்போல் எழுந்து அம் மகானது அற்புத பாதகமலங்களில் தெண்டனிட்டாள். கண்கூடாக் கண்டவர்கள் அனைவரும் இவ்வற்புதத்தைப் புகழ்ந்து பேசிக் கொண்டாடினார்கள்.

14. அத்தலத்தினின்றும் நம்மகான் இராமநாதபுரம் சென்று அங்குச் சிலநாட்கள் வாசஞ்செய்து வந்தனர். ஆங்கு ஒரு பிராமணன் குன்மவியாதியால் மிகவும் பீடிக்கப்பட்டு மணி மந்திர ஔஷதங்கள் முதலியவற்றுலும் தீராமல் நெடுநாள் வருந்திவந்தனன். ஒருநாள் அந்தப் பிராமணன் நம் மகானைக்கண்டு வணங்கிக் கண்ணீர்விட்டுக் கதறியழுது பாதபங்கயங்களைப் பற்றுக்கோடாகப்பிடித்துக்கொள்ள நம்மகானும் கருணைகூர்ந்து குனிந்து பூமியின் மண்ணைக் கிள்ளி அந்நோயாளியின் வாயிலிட அவ்வந்தணனது வியாதி அவனை விட்டு நீங்கி அவனும் க்ஷேமமாக வாழ்ந்திருந்தனன்.

15. இவ்வாறான மகிமைகளைக் கேட்ட ஒரு பிரமசாரி நம்மகானுக்குப் பணிவிடைசெய்துகொண்டு கூடவே சஞ்சரித்து வந்தான். அவன் ஒருநாள் இரவில் நம்மகானை நமஸ்கரித்து "சுவாமீ! இச்சமயம் ஸ்ரீ ரெங்கநாதர் சந்நிதியில் விசேஷமான உற்சவம் நடக்கிறதைப் பார்க்கவேண்டுமென்ற அவா அடியேனுக்கு மிகவும் உண்டாகிறது என்று விண்ணப்பிக்க, அதனைக்கேட்ட சுவாமிகள் சில சமிக்கைகாட்ட, அவ்விதமே அவனும் க்ஷணநேரம் கண்களை மூடிக்கொண்டு திறந்துபார்க்கத் தன் ஆசாரியராகிய சுவாமிகளும் தானும் ஸ்ரீ ரெங்கநாதருடைய சந்நிதியில் நின்று தீபாராதனமாகிறதைத் தரிசனஞ் செய்தார்கள். அச்சமயத்தில் சுவாமிகள் அந்தர்த்தானமாயினராம். பிரமசாரி சுவாமிகளைக் காணாமல் பல விடங்களிலும் தேடிச் சிலகாலத்துக்குப்பிறகு நெரூருக்கு வந்து சுவாமிகள் அங்கிருப்பதைக்கண்டு களித்து 'உழந்துவிழி பெற்று உயிர்ப்பொறை'யானான்

16. அவ்விடம் விட்டு நீங்கி நம்மகான் தில்லைச்சிதம்பரஞ் சென்று உலாவித்திரிகையில் ஒருநாள் ஒரு குடியானவனுடைய தோட்டத்துக்குச் சென்றார். அங்கே ஆலையாட்டிக்கொண்டிருந்தார்கள். கொப்பரையில் கரும்புப்பால் காய்ந்துகொண்டிருந்தது. அதனை எடுத்துத் தமக்கு வார்க்கும்படி ஜாடை காட்டினர். குடியானவன் காய்ச்சாத பாலைச் சுட்டிக்காட்டி அதனை எடுத்து வார்க்கப்போனான். நம்மகானோ அதனை மறுத்துக் கொப்பரையிற் காயும்பாலே வேண்டுமென்று குறிப்புக்காட்ட அக்குடியானவனும் கொதிக்கும் பாலை மட்பாண்டத்தில் மொண்டு நம்மகானுடைய மலர்க்கரத்தில் வார்க்கவே அவரும் குளிர்ந்த நீரை யாவலுடன் பருகும்விதம் பருகித் திருப்திகொண்டதாகக் காட்டினர். குடியானவனுக்கும் அன்றுமுதல் "பாலால் குறைவுமில்லை பாக்கியத்தால் தாழ்வுமில்லை" என்ற வண்ணம் ஐசுவரியம் பெருகி இனிது வாழ்ந்திருந்தான். ஸ்ரீமத் பகவத் பாதாள் என்று போற்றப்படும் ஸ்ரீ ஆதி சங்கரராகிய மகான் மளமளவென்று காய்ந்துகொண்டிருந்தாயத்தை அவ்வாறே எடுத்துப் பருகினரென்றும், சிஷ்யர்கள் அவ்வற்புதத்தைக்கண்டு கர்வம் நீங்கிப் புனிதமாயினரென்றும் அம்மகானது சரித்திரம் கூறுவதைப் பலரும் அறிவார்கள். நம்மகானது கிரந்தங்களையும் கீர்த்த

ணங்களையும் ஒருங்கே திரட்டி அச்சிட்டுப் பயன்பெறச் செய்யவே ண்டுவது புத்திமான்களின் கடமை. முன் சஞ்சிகையில் இவரது இரண்டு கீர்த்தனங்களை வழங்கிவருவதாகக் கூறினேன். ஏறக்கு றைய பத்துக் கீர்த்தனங்கள் தற்காலம் உலாவிவருகின்றன என்ப தைப் பின்னர் ஒரு நண்பர் மூலமாக அறியலானேன். ஆச்சரிய தர் ப்பணம் என்ற ஒரு பழைய அச்சுப்புத்தகமும், புதுக்கோட்டை சம்ஸ்கிருத பத்திரிகையும் இம்மகானது சரித்திரத்தை எழுத ஒரு வாறு எனக்கு உதவிபுரியலாயின. தெய்வநம்சம் பெற்ற மகான்க ள் ஆங்காங்கு அப்போதைக்கப்போது தோன்றி நாம் உய்யும் வண் ணம் கிருபைபுரிந்து வருகிறார்களென்பது திண்ணம். கண்ணிருந் தும் காணாமல் உழல்வது நம் குற்றமே.

"உடம்பினைப்பெற்றபயனாவதெல்லாம்
உடம்பினில்உத்தமனைக்காண்"

என்ற அருமைவாக்கின் பயனையறிந்து முயல்பவரே அவ்வுத்தமர்க ளைக்காண இடம்பெறுவார்கள். ஓம் சுபம்.

எஸ். சாமிநாதையர்.

---

## நன்மொழி.

49. பிறர்தூஷணை கொடிது. பிறருடைய தீய குணங்களையு ம், பாராதே, நினையாதே, அவரிடமுள்ள நல்லவை நாடு. பிற ரைப்பற்றிப் பேசும்முன், நன்றாய் அவரை அறிவாயா? சொல்லப்புகு ம்விஷயம் உண்மையா? சொல்லவேண்டுவதுதானா? சொன்னால் பிற ருக்குப் பயனுண்டாகுமா? சொல்லப்போவது நன்மையா? என்று ஆராய்ச்சிசெய்.

50. பொய்யைத்தவிர். விளையாட்டினும் பொய்யைத் தவிர். மெய்பேசு. மெய்யை இனிமையாய்ப்பேசு. பிறர் மனம் நோகுமா னால், பேசுவது உன்கடமையின்றேல், மெய்பேசுதலையும் தவிர். மௌனம்கொள்ளு.

51. விழிமின், எழுமின், தெளிமின், தெளிந்தமேதோர் அணுகு மின், அவர்காட்டும்ஞானவழியில் அகலாதுநில்லுமின். (கட உபநிஷத்)

# ஒரு சூரியசம்பிரதாயம் ஒரு பிரஹ்மாண்டம்.

அநேககோடி நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளில், சூரியன் சமீபத்திலுள்ள ஒரு நக்ஷத்திரமென்றும் முன்பிரஸ்தாபித்தோம்.* சூரியமண்டலமும் அதைச்சுற்றி இயங்குகின்ற கோளங்களும்சேர்ந்து சூரியசம்பிரதாயமென்று சொல்லப்படும். அதுவேஒரு பிரஹ்மாண்டமாம். இவ்விதம் அநேககோடி சூரியர்கள் இருக்கின்றமையால், அநேககோடி பிரஹ்மாண்டங்கள் உண்டு. சூரியனைச் சுற்றி இயங்கும் கோளங்கள் சூரியனிடமிருந்து, ஒளி, உஷ்ணம், பிராணன் முதலான சக்திகளைப்பெறுகின்றன. இது சாதாரணமாய் சாமாந்நியமாக யாவரும் ஒப்புக்கொண்டவிஷயம். இதற்குமேல் ஒரு முக்கியமானவிஷயம் ஞானிகளுக்குத் தெரியவரும். சூரியசம்பிரதாயம் என்றால், ஜீவன்மேன்மேலும் அபிவிருத்தியடைந்து விகாசம் பெறும்படியாக ஈசுவரனால் ஏற்பட்டுள்ள விஸ்தாரமானக்ஷேத்திரம். அதன்பிரகிருதி திரவியம் சூக்ஷ்ம ஆகாசமயமாக உள்ளது. இதினுள் ஈசுவரனின் சக்தி § ஓதப்புரோதமாக ஊடுருவிப்பாய்ந்திருக்கிறது. ஜீவர்களைச்சரீரமாகவும், தம்மை அவைகளின் சரீரியாகவும் ஈசுவரன் செய்துகொண்டிருக்கிறார். சூரியன் அவருடைய ஹிருதயம். அதினின்று பிராணசக்தி எங்கும்பரவியும் பிராணிகளை ஆதரித்தும் வருகின்றது. அப்படிப்பரவி ஆதரித்து வருகிறதில், அச்சக்தியின் பலம் குறைவுபட்டால், திரும்பவும் ஹிருதயத்தை நாடிச்செல்லவும், அப்பலக்குறைவு நிவிர்த்தியாக்கப்பெற்று மறுபடி வெளிக்கிளம்பிப்பரவி ஆதரித்துக்கொண்டு வருகின்றது. இக்கருத்தை பிரச்ந உபநிஷத் 1 – 8. மந்திரம் அழகாய் உபதேசிக்கின்றது. இதன் பொருள், — ஸர்வரூபியும், கிரணங்களையுடையவரும், ஞானமுடையவரும், ஸகலபிராணிகளுக்கும், ஆசரியமானவரும், ஒப்பற்றவரும், உலகத்திற்கெல்லாம் நேத்திரமானவரும், தாபஞ்செய்கிறவரும், அநேக கிரணங்களுடையவரும், அநேகவிதமான பிரா

---

* 125-ம்பக்கம் பார்க்க.

§ தேவாத்மசக்தி என்று ஸ்வேதாத்ஸவதரோபநிஷத்திலும், பரப்பிரகிருதி என்று பகவத் கீதையிலும், பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது இதுவே.

ஒரு சூரியசம்பிரதாயம் ஒரு பிரஹ்மாண்டம். உகாணிகளுக்கு பிராணனானவருமான இந்தச் சூரியன் ஜீவர்களின் பொருட்டு உதயமாயினார்.

2. ஒருசூரியசம்பிரதாயமென்றால் சிலகோளங்கள் அல்லது அவைகளின் சங்கிலிகோளங்களின் வெறும்கூட்டுவரவு மாத்திரம்அன்று. ஆனால் சூரியமண்டலமும் அதைச்சுற்றியுள்ள ஏழுகோளசங்கிலிக் கோவைகளும் ஒருங்கேசேர்ந்துபிராணசக்திவிளங்குமாறு அமைந்து ஈசுவரனுக்கு ஒருசரீரம் போன்றனவாம். ஏழுசங்கிலிக்கோவைகளும் அச்சரீரத்தின் பலஅங்கங்கள், அவயவங்களைப்போன்றனவாம். ஒவ்வொரு கோளசங்கிலிகோவையிலும் பிராணகலையான ஈசுவரசக்தி இயங்குகின்றது. ஒருசூரிய சம்பிரதாயம் என்றால், ஈசுவரனிடமிருந்து வெளிவரும் ஜீவர்கள் விகாசம்பெற்று ஒவ்வொரு ஜீவனும் பிதாவான ஈசுவரனைப்போன்ற நிலையையும் சாரூபத்தையும் கடைமுறையில் சாயுஜ்யத்தையும் பெறவும், அனுகூலமான க்ஷேத்திரமாக அமைந்திருக்கிறது. ஜீவாத்மாக்கள் ஈசுவரனான பரமாத்துமாவின் அம்சங்கள். பரமாத்துமாவோ பெருஞ்சுடர். ஜீவாத்மா அதின் சிறுபொறி. (முண்டக உபநிஷத்தைப்பார்க்க.) முன்சொன்ன கிரக சங்கிலிக் கோவைகளிலும் அவைகளின் கோளங்களிலும் மனிதன் மாத்திரமில்லை, மனிதவர்க்கத்திற்குத்தாழ்ந்தவர்க்கங்களான ஜீவர்களும் ஜீவிக்குமாறு அவைகள் ஏற்பட்டுள்ளன. சூக்ஷ்மகோளங்களில் மனிதனைவிட அதிகவிகாசம்பெற்ற ஜீவர்களும், மனிதனைவிடதாழ்ந்தவிகாசமுறையில் நடைபெறுகின்றஜீவர்களும்வசிக்கிறார்கள். அஜ்ஜீவர்களின்வெளிச்சரீரங்களுமே நுண்ணியதிரவியங்களால்அமைக்கப்பட்டுஇருக்கின்றமையால், அவை நம் ஊனக்கண்ணுக்கு தெரியவராவாம். ஆனால்சுருசுருப்பிலும், அறிவிலும்அஜ்ஜீவர்கள்மனிதனுக்குக் குறைவுடையவரல்லர். இச்சூக்ஷ்ம கோளங்களில் இஜ்ஜீவர்களுக்குள் கூட்டம்கூட்டமாகஅன்புள்ளவர்களாயும், வேலைகொண்டவர்களாயும் பிரஞ்ஞையுடன் திரிகின்றவர்களாயும், மரணத்திற்குப்பிறகு ஸ்தூலசரீரத்தை நீத்திருக்கிற மனிதர்கள், அநேகர் இருக்கின்றார்கள். மேலும் ஸ்தூலசரீரத்துடன் உலகத்தில் நடைபெறும்போது சூக்ஷ்மலோகங்களுடனே சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்ற மனிதர்களும் இச்சூக்ஷ்மகோளங்களில் இருக்கிறார்கள். இவ்வுண்மையை

மதஸ்தாபனுசாரியார்களும், தீர்க்கதர்சிகளும், முனிகளும், ரிஷிகளும் அனுபவசித்தமாக அறிந்திருக்கிருர்கள்.

3. இச்சம்பிரதாய முறையை நடத்துகின்ற ஈசுவரன் மூன்று விதமாகத் தம்மைவெளிப்படுத்துவார். சிருஷ்டிகர்த்தர், சம்ரக்ஷகர், ஸம்ஹாரகர்த்தா என்பவர்களாம். இம்மூவரைத்தான், நம்தேசத்தின் சாஸ்திரங்களில் பிரஹ்மா, விஷ்ணு, சிவன், அல்லது ருத்திரன் என்றும், கிறிஸ்துமத புத்தகங்களின் முறையே பரிசுத்த ஆவி, புத்திரன், பிதா, என்றும், பிரஹ்மஞானபுத்தகங்களின், மூன்ருெம், இரண்டாம், முதலாம் லோகாஸ் (logos) என்றும், இவ்விதமே முப்பான்மையாக மற்றுமுள்ள மதங்களிலும் சொல்லப்பெற்று வருகின்றன. ஒருவரே மும்மூர்த்திகளாக விளங்குகின்ருர்.

4. இச்சம்பிரதாயத்தின் நிர்மாணத்திற்குரிய பிரகிருதியானது ஏழுபடியுள்ளதாக இருக்கின்றது. அவ்விதமே பிரஹ்மாசிருஷ்டித்தார். 7-படியுள்ள அணுக்களின் திரள்களால் இச்சூரியசம்பிரதாயத்தைச்சேர்ந்த 7-சங்கிலிக்கோவையின் கோளங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. 7-படிகளும் மஹாஸ்தூலமானபடி முதற்கொண்டு மேன்மேலும் நுண்ணியதர்மம் ஏற்றமுள்ளவைகளாயிருக்கின்றன. அந்தந்தப் படிகளுக்கு ஏற்ப 7 பிரஞ்ஞான நிலைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வேழுபடிகளில் முதல்இரண்டுபடிகளான அதிக சூக்ஷ்மதிரவியங்களால் அமைந்தகோளங்கள்; இவைகள் ஆத்மதத்துவம் சுவப்பிரகாசமாய் கிரீடிக்கக்கூடிய பூமிகள். அவைகளில் முதலாவதில் தேவாதிகள் வசிக்கிருர்கள். இரண்டாவதில் சுத்தசத்துவ குணமமைந்தமனிதஜீவாத்மாவின் ஸ்வதஸ்தானம். அடுத்தஇரண்டு பூமிகள் திவ்விய தேஜோமயமானவைகள். இப்பூமிகளை மனிதன் அடையவே தானும் தேஜோமய ரூபியாகிருன். மனிதன் உணர்வு பெறுகிருன். ஐந்தாம்பூமி சுத்தமானவிக அல்லது பிரஞ்ஞாபூமி. ஆருவது, காமம் பற்றிய அசுத்தமான மானவிகபூமி. ஏழாவது ஸ்தூல் பிரகிருதியின் அமைப்பான நாம் வசிக்கும் பூமி, முதல் நான்கும் உயர்ந்த பிரஞ்ஞா பூமிகள். அவைகளின் திரவியங்கள் நுண்ணியவை. அப்பூமிகளில் வேற்றுமையான எண்ணம் உண்டாகாது. ஒருமையான மனோநிலை, ஏகீபாவ உணர்வுள்ள பூமிகளாம். சுத்த

மாநஸிக பூமியாகிய பிரஞ்ஞா பூமி, சுத்த மாநஸிக திரவியத்தால் அமைந்துள்ளது. எண்ணம், சங்கற்பம், பிரஞ்ஞை இவைகள் வெளிப்படுமாறு அவைகளுக்கு, ஏற்ற திரவியங்கள் இருக்கவேண்டும். மனோபாவம் என்பது ஒரு சக்தி. அதற்கு உபாதி வேண்டுமே. அது அங்குஉள்ளது. மனோபாவம்அல்லதுசங்கற்பம்மாறினால்அம்மாற்றம் மானஸிகதிரவியத்தில் ஒரு அலையாக, அதாவது நுண்ணிய சலநமாகக்காணப்படும். அச்சலநத்தைஸ்வரம்என்றும் கம்பநம்(Vibration) என்றும் சொல்லுவார்கள். ஸ்தூல பூமியானது மனிதனின் பிரஞ்ஞை வெளிப்படையாக ஏற்படுமாறு ஸ்தூலமான பிரகிருதிதிரவியங்களால் அமைந்துள்ளது.

5. மேற்கண்ட 7 படிகளுள்ள அணுக்கள் ஓதப்புரோதமாக ஊடு உருவிப் பரவியிருக்கின்றன. இந்த திரவியங்கள் ஒரு சூரிய சம்பிரதாய முழுமையும் சமமாக பரப்பப்பட்டிருக்கின்றனவல்ல. ஆனால் இத்திரவியங்களில் பெரும்பான்மையான ஸ்தூலமான நாலு படிகளில் உள்ள திரவியங்கள் திரண்டு குவிந்து, கிரகங்களாகவும் பூமிகளாகவும் கோளங்களாகவும் அமைகின்றன. சிறுபான்மையான நுண்ணிய மூன்று படிகளான திரவியங்கள் எங்கும் பரவி இச்சம்பிரதாயம் முழுமைக்கும் பொதுவானவைகளாக இருக்கின்றன. ஸ்தூலமான நான்கு படிகளின் கண்ணுள்ள திரவியங்கள் கோளங்களாக அமைந்தும், கோளங்களைச்சுற்றியும், இருக்கின்றன. ஆனால் இவைகள் ஒன்றோடொன்று (continuous connection) தொடர்பானசம்பந்த மில்லாம லிருக்கின்றன. ஏழு தேவர்களைப்பற்றி நாம் சாஸ்திரங்களில் படிக்கிறோம். அவர்கள், கிரகங்களான வல்கன், சுக்கிரன், பூமி, குரு, சனி, உரேனஸ், நெப்தூன் என்ற கிரகங்களை ஆளும் கிரகாதிபதிகளாம்.

6. மேற்படி ஏழு கிரகாதிபதிகளும் இந்தச் சூரிய சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஏழு கிரக ஸங்கிலிக்கோவைகளின் ஏழு அதிஷ்டான மூர்த்திகளாம். இச்சங்கிலிக்கோவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. நாம்பார்க்கும் மேற்கண்டகிரகங்கள் இந்த ஏழு சங்கிலிக்கோவைகளின் அந்தந்தச் சங்கிலிக்கோவையின் ஸ்தூலமானகோளம். இவ்வேழு சங்கிலிக்கோவைகள், விகாசமுறையின் ஏற்றத் தாழ்ச்சியான 7படிகளாகும்..ஒருசங்கிலிக்கோவைக்கு 7கோ

ளங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று நம்பூமியைப்போன்று ஸ்தூல மானது. மற்றக் கோளங்கள் நுண்ணிய திரவியங்களால் அமைப்புள் ளன. அதனால் அக்கோளங்கள் நம்கண்ணுக்குப் புலப்படா, இந்த ஏழு சங்கிலிக் கோவைகளில் முதல்மூன்று சங்கிலிக் கோவைகளில் மனிதர்களான நாம் பலஜீவராசிகளில் பலசரீரங்கள் எடுத்து அவை களினால் உண்டாகும் அனுபவங்களை சூக்ஷ்மமான ஸம்கார ரூபங் களாக நாம் அடைந்து, இப்போது இப்பூமி இருக்கின்ற நான்காம் சங்கிலிக்கோவையை அடைந்து, அதன் 7வட்டங்களில் நான்காம் வட்டத்தில் யாத்திரைசெய்துகொண்டு வருகையில், நான்காம்கோள மான இப்பூமியில் இப்போது வந்திருக்கிறோம். இச்சங்கிலிக்கோ வையில் பூமியைப்போல ஸ்தூலக்கண்ணுக்குக் காணப்படும் இரண்டு கோளங்கள் உண்டு. அவை செவ்வாய் புதன் என்ற கிரகங்களாம. மற்ற நான்கு கோளங்கள் நம்கண்ணுக்குத் தோன்றாத நுண்ணிய திரவியங்களால் அமைந்தவை. ஜீவர்கள் ஒவ்வொரு கோளத்திலும் பிறந்து அதன் அனுபவங்களால் பயிற்சிபெற்று, பின்புஅடுத்துள்ள கோளத்திற்குச் சென்று, அதன் அனுபவங்களை அடைந்து, இவ்வித மாக மேன் மேலும் விகாசமுறையில் விருத்தி அடைகின்றார்கள். சூக்ஷ்மமான 1-2-கோளங்களிலிருந்தோம். பின்பு 3-ம் கோளமான செவ்வாய் கிரகத்திற்கு வந்தோம். அதன் பின் 4-ம் கோளமாகிய பூமியின்கண் வந்திருக்கிறோம். இனிமேல் 5-ம் கோளமாகிய புதன் என்ற கிரகத்திற்குப் போகப் போகின்றோம். அதன்மேல் சூக்ஷ மமான 6-ம் 7-ம் கிரகங்களுக்குப் போவோம். இவ்விதம் ஏழு கோளங்களையும் ஜீவன் சுற்றிவரும் யாத்திரைக்கு விகாசமுறையில் ஜீவர்கள் நடைபெறும் ஒரு கிரக சங்கிலிவட்டம் என்று பெயர். (இந்தவிஷயத்தைப்பற்றித் தெளிவாய் மனிதனின் வமிசாவளியின் உண்மை என்ற புத்தகத்தில் கண்டுகொள்க) இந்த விரிவான விகா சமுறையும் அதன் பின்னலான பல விஷயங்களும் சாதாரண ஜனங் களுக்குப் புலப்படா. நக்ஷத்திர சாஸ்திரிகளான ஜோதிஷ சாஸ்திரி களும் இவைகளை அறியார்கள். தத்துவங்களை அறிய விரும்பும் ஞான வித்தியார்த்தி, அதிக சிரமப்பட்டு நுட்பமான புத்தியால் இந்தச் சூரிய சம்பிரதாய முறையின் உண்மையைத் தெரிந்துகொள் வான். அவ்வுண்மையைத் தெரிந்து அவ்வுண்மைக்குக் காரணமாம் தத்துவனை உள்ளபடி ஒருவாறு தூய்மையான மனக்கண்ணால் அறி வான், அறிந்து ஆநந்திப்பான். வேங்குஸ்வாமி அய்யர்.

## ஹிந்தியாதேசமுழுமையும் ஒரே பாஷையும் ஒரே லிபியும் (எழுத்தும்) இருக்கற்பாலது.

சென்ற அக்டோபர் மாதம் 10, 11-ம் தேதிகளில் ஹிந்தி வித்வான்களின் சபை காசி க்ஷேத்திரத்தில் கூடியது. பிரம்மஸ்ரீ மதன் மோகன் மாளவ்யா என்பார் அக்கிராசநம் வகித்தார். கல்கத்தா ஐக்கோர்ட் ஜட்ஜியாகவிருந்து, இப்போது பென்ஷன் பெற்றிருக்கின்ற ஸ்ரீமாந். சாரன்மித்திரன் என்பார் இத்தலைப்பில்கண்ட விஷயத்தைப்பற்றி எழுதியனுப்பிய வியாஸம் ஷை சபையின்கண் வாசிக்கப்பட்டது. அதனுள்கண்ட சிலமுக்கியமான அம்சங்கள், இதனடியில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. "இமயமலைமுதல் கன்னியாகுமரிவரையில்இருக்கின்ற பலஜாதியார்களில்,முக்கியமாகஹிந்துக்களாவது ஒரே பாஷையைப்பேசவும், அப்பாஷையை ஒரே அக்ஷரத்தில் எழுதவும் செய்தால் மிகவும் நலமாக இருக்கும். தேசம் முழுமையும் ஒருங்குசேர்ந்து வாழ ஹேதுவாகும். ஒரே ஜனஸமூகமாக ஏற்படுவதற்கு இது முக்கியமான சாதனமாகும். ஆதியில் இந்தியா தேச முழுவதிலுமுள்ள, வித்துவான்கள் அறிஞர்களுக்குள் சமஸ்கிருத பாஷையானது பொதுவாக நடைபெற்றுவந்தது. ஆனால் சாதாரண ஜனங்களுக்குள் சமஸ்கிருத பாஷைகளிலிருந்துண்டான பல பிராகிருத பாஷைகள் வழங்கிவந்தன. சொற்ப வித்தியாசங்களுடனே அவைகள் நடைபெற்றன. வடஇந்தியாவிலும் மேலிந்தியாவிலும் வழங்குகின்ற பாஷைகள் சமஸ்கிருதத்திலிருந்துண்டாகி விருத்தியாகி இருக்கின்ற பல பிராகிருத பாஷைகளாம். எல்லாப் பிராகிருதபாஷைகளும் சொற்பசிலவித்யாசங்களுடனே, தேவநாகிரி லிபியில் எழுதப்பட்டு வருகின்றன. அவ்வித்தியாசங்களெல்லாம் நீங்கி ஒரே லிபியும் ஒரே பாஷையும் ஏற்படுத்தல் இந்தியாதேசத்திற்கு க்ஷேமகரமாயிருக்கும்

2. சிலர் அபிப்பிராயத்தில் ஆங்கிலபாஷையையும்,ரோமாங்லிபியையும்அவ்விதம்ஏற்படுத்தலாமென்றும், சிலர் பாரிஷைபாஷையை அவ்விதம் ஏற்படுத்தலாமென்றும், அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அவ்விதம் சம்பவிக்கும்படி செய்தல் முடியாததென்று தோன்றுகிறது. அநேக ஆக்ஷேபணைகள் இருக்கின்றன. மேலும் நாமெல்லோரும் ஹிந்துக்களாயிருக்கின்றமையால், நம்முடைய பாஷையின்

மேல் ஒருவிதமான அபிமானமிருக்கக்கூடுமன்றோ? என்னுடைய அபிப்பிராயத்தில், தேவநாகிரி லிபியும் ஹிந்தி பாஷையும் இந்தியா தேசத்திலுள்ள எல்லாஜாதியாருக்கும் பொதுவானவையாக அமைத்துக்கொள்ளுதல் சாத்தியமென்று தோன்றுகின்றது. வடஇந்தியாவிலும் மேலிந்தியாவிலும் நடைபெறுகின்ற ஏனைய பாஷைகளுக்குள் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசமில்லை. ஹிந்திபாஷையினின்றும் அவைகள் அதிகமாக வித்தியாசப்படவில்லை. ஹிந்திபாஷையில் சொற்ப சிலமாற்றங்களைச்செய்தால், அப்பாஷையானது ஆதியில் சமஸ்கிருதம் இருந்ததுபோல் வித்வான்களுள்ளும் அறிஞர்களுள்ளும் வழங்கும் பாஷையாக ஏற்படும்.

3. ஹிந்தி பாஷையானது சமீபகாலமாக அதிக விருத்தியாகிக்கொண்டு வருகிறது. ஹிந்திபாஷையானது சமஸ்கிருதவார்த்தைகளை இன்னுமதிகமாக ஏற்றுக்கொண்டு நடைபெறும் பக்ஷத்தில், அதிக சீக்கிரத்தில் நலம்பெற்று உயர்தர பாஷையாக நிலைபெறும்.

4. ஏகலிபிவிஸ்தாரபரஷத் என்று பெயருள்ள ஒரு சமாஜம் கல்கத்தாவில் சென்றஐந்து வருஷமாக நடைபெற்றுவருகின்றது அதின் முக்கியமான நோக்கமென்னவென்றால் ஒரே எழுத்தில் தேசத்தில்வழங்குகின்ற பலபாஷைகளும் எழுதப்படவேண்டுமென்பதாம். அதனுடன் தேசமுழுவதும் ஒரே பாஷை பேசப்பட்டுவரவேண்டுமென்று நினைக்குங் கருத்து பொருத்தமாகவிருக்கின்றது. நம் தேசத்திலுள்ள வித்வான்களும் அறிஞர்களும் தாங்கள் கற்கும் பல பாஷைகளுடன் ஹிந்தி பாஷையையும் கற்கவேண்டுமென்று சங்கற்பங்கொள்வார்களாகில், நாமிப்போது கொள்ளுங் கருத்து சீக்கிரம் சித்தாந்தம் பெறும். ஹிந்துமதத்திற்கும் சமஸ்கிருத பாஷைக்கும் உயிர் ஸ்தானமென்று சொல்லக்கூடிய காசி க்ஷேத்திரம் ஏற்பட்டிருப்பதில், அதின் அங்கமாக ஹிந்திபாஷையும் தேசமெங்கும் பரவவேண்டுமென்பது என் பிரார்த்தனை." மேற்கண்டபடி சாரதா சரன் மித்திரன் என்பார் சொல்லுகிற விஷயங்களை ஆலோசிக்குமிடத்து வடஹிந்தியா, மேலிந்தியா, கீழ்ஹிந்தியா பாகங்கள் ஒன்று சேரவும் ஏற்கனவே பரவிக்கொண்டு வருகின்ற தேவநாகிரி எழுத்தும் ஹிந்திபாஷையும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு மேற்கண்ட

மாகாணங்களின் ஜனங்களுக்குள் போக்குவரத்திற்கு அநுகூலமாக ஹிந்திபாஷை யமையுமென்று தோன்றுகிறது. தென்னிந்தியாவிலோ, தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் முதலிய திராவிடபாஷைகள், தனித்தனி இலக்கணங்களும் தனித்தனி இலக்கியங்களும் தனித்தனி வேறுவேறு எழுத்துக்களும் உள்ளவைகளாக விருக்கின்றன. இப்பாஷைகளுக்குள் வேறு வேறு எழுத்துக்களை நீக்கி பொதுவான தேவநாகிரி எழுத்தை அமைத்துக்கொண்டு அநுஷ்டானத்தில் கொண்டுவருவோமானல் மிகவும் க்ஷேமகரமாக விருக்கும். பாஷைக்கு உயிரானது ஒலிவடிவு. வரிவடிவு நாம் அணியும் உடைபோன்றது. மாறுதல்தன்மையுள்ளது. வரிவடிவமான வெழுத்து ஒரேமாதிரியாகவிருப்பதில்லை. தமிழ்ப்பாஷையின் பூர்வீக எழுத்துக்களை, கல்வெட்டுக்களில் பார்த்தால், அவை இக்காலத்தில் வழங்கு மெழுத்தைவிட முற்றும் வேறுபட்டவைகளாகவே காணப்படும். எழுத்தின் உருவத்தைப்பற்றித் துரபிமானங் கொள்ளாமல், தேவநாகிரி எழுத்தை அநுஷ்டிக்கும்படியாக தமிழ்ச்சங்க முதலான சபையார்கள் முயற்சிப்பாராகில், அந்த அநுஷ்டானம் சாத்தியமாகுமென்று மதிக்கிறோம். மேலும் இக்காலத்தில் உலக யாத்திரை நிகழ்வதற்கும், ஞானமார்க்கத்தின் உயர்நலம் பெறுதற்கும் தேசபாஷைகளைத்தவிர, சமஸ்கிருதம் ஆங்கிலம் கற்கவேண்டியதாக விருக்கின்றது. ஒவ்வொரு பாஷையின் தனித்தனியான அக்ஷரங்களைக் கற்றுக்கொள்ளுவதற்கு செலவளிக்குங் காலத்தைச் சுருக்கிக்கொள்ளுதல் நலமாகவிருக்கும். ஒரே லிபி தேசமெங்கும் பரவுமாகில், தமிழ் முதலான பாஷைகள் அந்தந்த பாஷைகளில் பிறந்தவர்களல்லாமல் ஏனையர்களும் கற்கும்படியான சௌகரியமும் அமையும். இந்த ராஜதானியின் ஒவ்வொரு முக்கியமான பட்டணத்திலும் ஹிந்தி பாஷையைக் கற்கும்படியாக ஒரோர் பாடசாலை ஏற்படுத்தினல், மிகவு முபகாரமாகவிருக்கும். சீக்கிரம் அப்பாஷை பரவும். அப்பாஷையைக்கற்றல் சிரமமில்லை. மற்றைய பாஷைகளை நோக்க மிகவும் சுலபமானது தெற்கேயிருக்கின்றவர்கள் வடக்கேயும் மேற்கேயும்யாத்திரைசெய்தால், ஹிந்தி பாஷையைக் கற்றிருப்பாராகில் யாத்திரையும் அறிவுபற்றியதாக நிகழும். யாத்திரையின் பிரயோஜனம் குறிப்பிட்ட க்ஷேத்திரங்களைமாத்திரம் தெரிசிப்ப

தன்று. ஆங்காங்குள்ள ஜனங்களுடன் சம்பாஷித்து அதன் மூலமாய் மனம் மனத்துடன் ஸ்பரிசிக்க ஞான ஒளி உதயமாகும். அவ்விதம் பிரயோஜனப்படும்படியாக யாத்திரை நிகழவேண்டுமானால், இந்தியாதேச முழுவதும சிலாமணியாகக்கூடிய ஹிந்தி பாஷையைக் கற்கைநன்றே. நாளடைவில், தேசீமுழுமையும் ஓரே ஜனஸமூகமாக ஏற்பட இயலும். அதனால் இந்தியா தேசம் உயர்நலம பெறும்.

(குறிப்பு:—இவ்விஷயத்தைப்பற்றி சமீபத்தில் அலஹபாத் என்ற பிரயாகையில் கூடிய, சபையில், சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜிஅவர்களாகிய, கனந்தங்கிய வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் விசாலமான உபந்நியாசம் செய்தார்கள். அதினுள்ள முக்கிய அம்சங்களை இன்னொருசமயம் தெரிவிப்போம்.)

ப. நா.

---

## நன்மொழி.

52. இச்சரீரம்பெற்றது ஈசுவரகைங்கரியத்திற்காம், தன்னை ஓம்பற்கன்று.

53. ஓரே பிராணன் என்றும் உள்ளது எங்குமுள்ளது. நீக்கமற நிறைந்திருக்கின்ற பரிபூரணம் அது. அதற்கு ஆதியும் அந்தமுமில்லை. பால்யம், கௌமாரம் யௌனம் வார்த்திகம், பிறப்பு இறப்பு என்றுநம்மால் ஏற்பட்டகால அளவைகள் அதைப்பொருந்தா. அது காலத்தைத்தாண்டியது. பூமா என்று சாந்தோக்கிய உபநிஷத்தில் சொல்லியிருப்பதும் அதுவே.

54. உன்னுடைமையாவையும், ஞானமூர்த்தியாகிய குருவின் பாதாரவிந்தத்தில் வைப்பாய், அர்ப்பணசெய்வாய், அவரே ஞான வழிதிறப்பார், அவ்வழியில் நடத்துவார், தியாகத்தினால்தான் அவ்வழியிற்புக சுதந்தரம் ஏற்படும், ஞான உபதேசம்பெற பாத்தியம் உண்டு.

55. நித்தியனான இறைவன் உனக்கு இடைஅறாத லக்ஷியப் பொருளாக இருக்கட்டும். அதனால் உன் அறிவுமலரும், விகாசம்பெறும், உன் வாயினின்று உயர்நலம் அமைந்த வார்த்தைகள் வெளிவரும். உன்செயல் எல்லாம் அழகும் நலமும் உரியவாக நடைபெறும். இவை எட்டுப்படிப்பால் வாரா.

## புத்தக வரவு.

---

**இருபதாம் நூற்றாண்டின் தமிழ் அகராதி:**—தமிழ் பாஷையில் பலநிக ண்டுகள், சதுரவகராதிமுதலான பல அகராதிகள் இருப்பினும், விரி வான பெரிய அகராதி இன்மைபெருங்குறையாக இருந்தது; அப்பெருங் குறையை ஒருவாறு நிவிர்த்திசெய்துள்ள புண்ணிய புருஷர், ஸ்ரீமான். ப. இராமநாதன் B. A. என்பவராம். பலவருஷங்களாக அதிகசிரமமெடுத்துக் கொண்டு, அதிக ஊக்கம் உத்ஸாகத்துடனே, இப்பெருங்காரியத்தை லோ கோபகாரமாக அழகாயும்நன்ருயும்செய்து முடித்துள்ளார். இதன்கண் பழை ய அகராதிகளிற்காணப்படும் பதங்களுக்குமேல் 10,341 புதிய பதங்கள்சே ர்க்கப்பட்டிருக்கின்றன. இதில், பெயரகராதி. பொருள்அகராதி, தொகை யகராதி, தொடையகராதி என நால்வகை அகராதிகள் அடக்கம். 1720- பக்கங்களும், ஆங்காங்கு, பொருள்களை சுட்டிக்காட்டும் படங்களும் உள் ளன. இஃது எவ்வாற்ருனும் மற்றைய அகராதிகளைவிட பன்மடங்கு சிறந்ததென்று சொல்லலாம். இவ்வரிய பெரிய அகராதி, தமிழ்பாஷை கற்பவர்க்கும் கற்பிப்பவர்க்கும், வித்வான்களுக்கும் சாதாரணமனிதருக் கும், உத்தியோகஸ்தர், வைக்கீல்மார்களுக்கும் மிகவும் உபயோகமானது. இதன்பெருமையையும், இதன் வேலைத்திறமையையும், இதன் உயர்நலம் அமைந்த பதிப்பையும், இதன்நேர்த்தியான கட்டடத்தையும் பார்க்குமள வில், இதன் விலை ரூ 10. மிகவும் குறையுள்ளதே. ஒவ்வொரு தமிழனும் இதை வாங்கவேண்டும். இது எங்கும் பரவவற்பாலது என்பது நம்முடைய பிரார்த்தனை.

**தசகாரிய விளக்கம்:**—இது சைவசித்தாந்த சாஸ்திரங்களில் உளவா கிய விஷயங்களில் ஒருமுக்கிய பாகமாகிய தசகாரியம் என்ற அம்சத்தைப் பற்றிய ஆராய்ச்சி அமைந்தவியாசம். இது, தூத்துக்குடியில் நடைபெறு கின்ற சைவசித்தாந்த சபையின் உப அக்கிராசனுதிபதியாகிய ஸ்ரீமான். பொ. முத்தையபிள்ளை அவர்கள் இயற்றியது. சைவம் வைதிகசைவமென் றும் ஆகமசைவமென்றும் இருவகைத்து. ஆகமசைவத்தில் தசகாரியம் என் பது முக்கியமானபாகம். அது இப்புத்தகத்தில் தெளிவாய் விளக்கப்பெற் றிருக்கிறது. இது, மதவிஷயங்களில் ஆராய்ச்சி செய்பவர்கட்கு, முக்கிய மாக சைவசமயிகளுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. அழகாய் அச்சி டப்பட்டு, நன்ருய் கட்டப்பட்டுமிருக்கிறது. இதன் விலை அணு 8.

**திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில்:** பிரதிஷ்டாபக் தனம்—வரவு செலவுகணக்கு இது. ஷை திவ்வியக்ஷேத்திரத்தில் 1909ளூ

பிப்பரவரி-ீ 8-உ சோமவாரதினம் நடந்த பிரதிஷ்டாபந்தனவரலாறும் அதன் வரவு செலவுகணக்குகளும் அடங்கிய புத்தகம். தென்னிந்தியாவில்உள்ள ஹிந்துக்கள் யாவரும் அபிமானித்து இந்த மஹாபுண்ணிய கைங்கரியத்தை நடப்பித்தார்கள். இத்தன்மையான அரியபெரிய விஷயங்கள் நடத்தும் முறைகள் விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கின்றன. ஷை விஷயத்திற்கு மொத்தம் வரவு 147,418—ரூ மொத்தச்செலவு 139,888—ரூ பாக்கி ரூ 7530. இத்தகைய பொதுக்காரியங்களை நடத்துகின்றவர்கள், இதுகாறும், வரவு செலவுகணக்கு பிரஸித்தம்பண்ணமல் இருந்திருக்கிறார்கள். அப்படியில்லாமல், திருச்செந்தூர் தேவஸ்தானத்தார் வரவு செலவு கணக்கு பிரஸித்தம் செய்தபடி, நம்மவர்கள் இனிச்செய்வார்கள் என்று நம்புகிறோம்.

**வியாசப்ரகாசிகை:**—இச்சிறுபுத்தகம் தமிழில் வியாசம் எழுதப்பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது. இதன்கண் வியாசம் எழுதும்முறையில் கவனிக்கவேண்டிய விஷயங்களும், அவ்விஷயங்களை எடுத்துக்காட்டிய சிலஅழகான வியாசங்களும் எழுதப்பெற்றுள்ளன. இத்தகைய புத்தகம் இக்காலத்திற்கு எற்றதாக இருக்கிறது. இதன் விலை அணு 8. திருவல்லிக்கேணி 'சக்கரவர்த்தினி' ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

## நன்மொழி.

56. அகந்தை மமதைஅற்ற அன்புதான் பிறர்நலம் அருளும். உலகுக்கு உயர்நலம் அளிக்கும். இறைவனிடம் சேர்ப்பிக்கும்.

57. ஐக்காக்கிரம் என்பது சித்தம் ஒருமுகப்படுதல், மனம் சிதராமல் ஒன்றையேபற்றி நிற்றல். ஒரே வஸ்துவின்பாவம் உண்டாதலும் அழிதலும் உண்டாதலுமாயிருத்தல். வேறு வஸ்துவின் பாவம் இடையில் புகாதிருத்தல், சிந்தனை அற்றுப்போதல் அன்று.

58. ஞானவிகாசமுறையில் உயர்நலம் பெறவேண்டுமானால், செய்யும்கருமத்தின் நோக்கம் நன்மைபற்றியதாக இருத்தல்வேண்டும். இம்முறையில் கருத்துத்தான் முக்கியம். கருமம் அதற்கு அடுத்ததுதான்.

59. நன்னம்பிக்கை நலம்தரும், சந்தேகம் ஞானமுறையில் நாசம் உண்டாக்கும்.

# சமாசாரக்கொத்து.

பம்பாய் இராஜதானியில் சென்றவருஷம் 555 தொழிற்சாலைகளிருந்தன வாய்த்தெரிய வருகின்றது. ஒவ்வொரு நாளிலும் அத்தொழிற்சாலைகளில் வேலைசெய்தவர்களின் சராசரி தொகை 2 27 359. இதனாலேயே தொழிற்சாலைகளால் தான் நம் நாட்டு ஏழைகளுக்கு நல்லஜீவனம் உண்டாகும் என்பது ஏற்படுகிறது.

சைவசித்தாந்தசமாஜம்:—இவ்வருஷம் இராமநாதபுரத்தில் கூடியது. அச்சமயம் மைசூர் மகாராஜாவுக்கு ஸீனியர் கௌன்ஸலராயிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ புத்தண செட்டியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பல வித்வான்கள் கூடினார்கள். திவ்வியமான உபந்நியாசனங்கள் ஆங்கில தமிழ்பாஷைகளில் நடைபெற்றன.

## நம்சக்கரவர்த்தி இந்தியாவுக்கு விஜயம் செய்தல்.

1912-ம் வரு ஜனவரிமீ 1உ நம் சீர்மைதங்கிய ஜார்ஜ்சக்கிரவர்த்தி நம்முடைய மகா இராணியார் சகிதம் நம்இந்தியாவுக்கு வந்து டில்லிமா நகரில் முடிசூட்டுக் கொண்டாட்டம் நடைபெறுமென்று அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அச்சமயம் நம் நாடுமுழுவதும் கொண்டாடும் வைபவத்தைச் சொல்லவும் வேண்டுமோ.

1909வரு ஜனக்கணக்கின்படி நம் தேசத்தில், 121,500 வாலிபர்கள் கல்யாணமானவர்கள். 243500 கல்யாணமான 5வயதுக்குட்பட்ட சிறுமிகள். 96000 கைம்பெண்கள் 5வயதுக்குட்பட்டவர்கள். 96000கைம்பெண்கள் 5வயதுக்கு மேற்பட்டும் 10வயதுக் குட்பட்டுமுள்ளவர்கள். 2,76,090, கைம் பெண்கள் 10வயதுக்கு மேற்பட்டும் 15வயதுக் குட்பட்டு உள்ளவர்கள். இக்கொடுமைகளுக்குக் காரணம் நம்மவரின் அறிவீனமன்றோ? இவை வேதசாஸ்திரங்களுக்கும் விரோதமன்றோ? நாம் எப்போது இவைகளுக்குக் காரணமாய வழக்கங்களை தவிர்ப்போம்?

கும்பகோணத்தில் ஸ்ரீராமாநுஜ சித்தாந்தசபை என்று ஒரு புதுசபை ஸ்தாபிக்கப்பெற்று அதற்காக மூவாயிர ரூபா செலவில் ஒரு கட்டடமும் கட்டிவிட்டதாகத்தெரியவருகிறது. அந்தச்சபை ஒருகமிட்டியின்விசாரணையில் நடந்து வருகிறதென்றும், ஒவ்வொரு இரவும் உபந்நியாசங்கள் நடைபெற்றுவருகின்றனவென்றும், கேள்வியுற்று மிக்கமகிழ்ச்சியுறுகிறோம். பண்டிதர்களைப்படிப்பித்து அவர்களுக்கு வெகுமதியளிப்பதும் இச்சபையாரின் கருத்துக்களின் ஒன்றும். இச்சபை நீடுழி வாழ்க.

1891-ம் வருஷம் முதல் 1901-ம் வருஷம் வரையிலுள்ள பத்துவருஷத்தில் உலகத்தின் பலதேச ஜனவிருத்தி அடியில் வருமாறு:—

| தேசங்கள் | 100க்கு எவ்வளவு அதிகம் |
|---|---|
| இங்கிலாந்து | 12·1 |
| வேல்ஸ் | 13·3 |
| ஸ்காத்லாந்து | 11·1 |
| பெல்ஜியம் | 13 |
| டென்மார்க் | 13 |
| ஜெர்மனி | 15 |
| அமெரிக்கா ஐக்கியநாடு | 20 |
| நம் இந்தியா | 1·5($1\frac{1}{2}$) |

இந்தப் பத்துவருஷத்தில் பஞ்சத்தினால் இந்தியாவில் இறந்துபோனதாக கணக்கிடப்பட்டிருக்கிறவர்களின் தொகை190லட்சம்ஜனங்கள். பஞ்சத்துடன்பலவித வியாதி, வறுமைமுதலிய பலகாரணங்களால்நம்தேசத்து ஜனுபிவிருத்தி மிகவும் சொற்பம். அடுத்த ஜனகணிதத்தில் என்ன விதமாகஇருக்குமோ பார்க்கவேண்டும்.

| தேசங்களின் பெயர் | ஒரு சதுரமைலுக்கு ஜனத்தொகை |
|---|---|
| ஆஸ்திரியாஹங்கேரி | 196·22 |
| ஆஸ்திரியா | 233·031 |
| பெல்ஜியம் | 627·95 |
| டென்மார்க் | 167·58 |
| பிரான்ஸ் | 189·51 |
| ஜெர்மனி | 289·60 |
| இத்தலி | 303·71 |
| ஜப்பான் | 324·91 |
| ஹாலண்ட் | 445·12 |
| ஸ்விட்ஸர்லாண்டு | 216·57 |
| இங்கிலாந்து அயர்லாந்து ஸ்காத்லாந்து | 356·11 |
| நம் இந்தியா | 166·62 |

நம் தேசத்தில் ஜனநெருக்கம் அதிகம் இல்லை. சாகுபடிக்குவரக்கூடிய தரிசு 450,000 சதுரமைல் இருப்பதால், நம்ஜனங்கள் அந்நியநாட்டுக்குக் கூலிகளாய்ப்போய் அடிமைகளாகிக் குடியைக் கெடுக்காமல் விவசாயத்தைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து வருவார்களானால் நாம் சௌக்கியமாய் வாழலாமென்பதற்கையமில்லை.

**பிராணயாமமும்-ஜலதோஷமும்:**—ஜலதோஷம் பிடிப்பதற்கு முக்கிய காரணம், ஒரு இடத்திலிருந்து சீதோஷ்ணம் அதிக வித்தியாஸமுள்ள வேறொரு இடத்துக்கு மாறுவதே. பலபேர் கூடிய நாடக சாலைகளிலும் பாட்டுக் கச்சேரி ஹால்களிலும் உஷ்ணம் அதிகமாயிருக்கும். வெளியிலோ உள்ளே விடக் குளிர்ச்சியாயிருக்கும். ஆகவே உஷ்ணமான இடங்களைவிட்டு திடீரென்று வெளியே வரும்பொழுது தேகம் குளிர்ந்த நிலைமைக்கு ஸரிப் படுத்திக்கொள்ள அவகாசமில்லாததால் ஜலதோஷம் உண்டாகிறது. இதை அடியிற்கண்ட உபாயத்தால் ஸுலபமாய்த் தடுத்து விடலாம். நம்முடைய தேகத்தின் தோல்களில் வேர்வை முதலிய கழிவுகளை வெளிப்படுத்த சிறு த்வாரங்கள் இருக்கின்றன. இந்த த்வாரங்கள் நாம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் வரையில் திறந்திருக்கும். மூச்சை பந்தனம் செய்துவிட்டால் அவைகள் உடனே மூடிப்போம். இதன் உண்மையை அறியவேண்டுமானால் ஒரு சிறு பரீக்ஷைசெய்து பார்க்கலாம். ஒருதேனீயை நாம் சுவாஸம் விட்டுக்கொண்டிருக்கும்பொழுது கையில் எடுத்தால் அது நம்மைக்கொட்டி விடும். சுவாஸத்தை பந்தனம் செய்துகொண்டு தேனீயைக் கையில் எடுத்தால் அது நம்மைக் கொட்டமுடியாது. இதற்குக் காரணம் என்னவென்றால் நாம் சுவாஸம் விட்டுக்கொண்டிருக்கும்பொழுது நம்முடைய உள்ளங்கையிலுள்ள த்வாரங்கள் திறந்திருக்கின்றன. ஆகையால் அந்தத்வாரத்தில் ஸுலபமாய் தேனீ ஊசிபோன்ற முனையைச்செலுத்தி கொட்டிவிடுகிறது. சுவாஸம் பந்தனமாயிருக்கும்போது உள்ளங்கைத்தோலிலுள்ள த்வாரங்கள் மூடியிருக்கும். அப்படி மூடிக்கொண்டிருக்கும் தோலைக்குத்த தேனீக்குப் பலமில்லை. ஆகையால் அதற்கு கொட்டமுடிகிறதில்லை. நம்முடைய தேகத்து மேல்தோலிலுள்ள த்வாரங்கள் சுவாஸம் விட்டுக்கொண்டிருந்தால்திறந்திருக்கும் என்பதையும், சுவாஸத்தை பந்தனம் செய்தால் அவைகள்மூடிக் கொள்ளும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம். ஏனென்றால்அந்த த்வாரங்கள் திறந்திருக்கும்பொழுதுதான் அவைகளின்மேற்குளிர்ச்சி பட்டால் உடனே ஜலதோஷம் பிடிக்கிறது. ஆகவே கொஞ்சம் உஷ்ணமாயுள்ள நாடக சாலை முதலிய இடங்களை விட்டு வெளியில் வரும் பொழுது மேலே சொல்லிய த்வாரங்கள் திறந்திருக்காமல் கொஞ்சம் சுவாஸத்தை பந்தனம் செய்தால், அவைகள் மூடிக்கொள்ளும். அவைகளின்மேல் குளிர்ந்த காற்றுப்பட்டால் ஒன்றும் செய்யாது. கொஞ்சம் சுவாஸபந்தனம் செய்வதால் உள்ளே இருக்கும்போது ஏற்பட்ட உஷ்ணத்தைவெளியிலுள்ள குளிர்ச்சிக்கு ஸரிப்படுத்திக்கொள்ள தேகத்துக்கு அவகாசம் ஏற்படும். அதனால் திடீரென்று தேகத்தின்மேல் குளிர்ச்சிபடுவதால் உண்டாகும் தீங்கு ஏற்படாது. மேலே சொல்லியபடி 4 அல்லது 5 தடவை சுவாஸ பந்தனம் செய்து விடுவது மிகவும் நல்லது. [பிழைக்கும் வழி.]

**ஒரு தோல் உரியும் மனிதன்:**—சர்ப்பங்கள், நண்டுகள் முதலான ஜீவ ஜெந்துக்களுக்கு மாதாமாதம் தோலுரிந்து வேறுதோலுண்டாகிறதென்று நாமறிவோம். இலைகளுள்ள மரங்களெல்லாம் வருஷத்தில் ஒரு முறை இலைகள் உதிர வேறுபுது இலைகள் துளிர்க்கப்பெறுகின்றன, சிலமரங்களில் வருஷத்தில் இரண்டுமுறை புது இலைகள் உண்டாகின்றன. ஆனால் மனிதன் வருஷாவருஷம் தன் பழைய தோலையிழந்து புதுத்தோலையடைகிறானென்று இதுவரையில் எவரும் கேள்விப்பட்டதில்லை. இப்போது அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளில் இண்டியனுபோலீஸ் என்ற பட்டணத்தில் ஒருவன் தன்குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒவ்வொரு வருஷமும் தவருமல் பாம்பைப்போல் தோலுரியப்பெற்று அதற்குப் பதிலாய் புதுத்தோல் அடைந்துகொண்டுவருகிறான். அத்துடன் அவன் கால் விரல்களிலும், கை விரல்களிலுமுள்ள நகங்களும் கழன்றுபோய் வேறு நகங்கள் வளருகின்றன. அவனுக்குத் தோலுரியும்போதும், நகங்கள் கழலும்போதும் யாதொரு உபத்திரவமுமில்லையாம். ஆனால் அந்தக்காலத்தில் லேசாய் ஜுரம் மாத்திரம் அடிக்கிறதாம். பழைய தோல் போய்ப்புதிதாய் உண்டான தோல் தடித்து உறுதிப்பட மூன்றுவாரம் பிடிக்கிறதாம். டாக்டர்கள் இந்த அதிசயமான மனிதனைப் பலதடவையும் பரிசோதனைபண்ணிப் பார்த்தார்கள் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்றும், பாம்பாய்ப்பிறக்க வேண்டியவன் பிசகி மனுஷனாய் பிறந்தானென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

[வைத்திய போதினி.]

பத்திராதிபர்.

## நன்மொழி.

60. நல்லபாவனைகள் மேன்மேலும் அதிகப்பட, தீயஎண்ணங்களும் துராசைகளும் தாமே ஒய்ந்துமடியும.

61. பிறரிடம் குணநலம் காண்டலும், அதைப்போற்றுதலும், அதனால் அவர்மேல் அன்புபாராட்டலும, அவரை பிரியத்துடன் உபசரித்தலும், உன்னை அறநெறியில் சேர்ப்பிக்கும். அவ்வண்ணம் ஒழுகமுயல்வாய் அன்றோ?

62. ஆசை உண்டாகாமல் தடுப்பாய், ஆசை உண்டானபின், அதை உண்பிக்காமல் வறுப்பாய், இதுதான் ஞானமுறை.

63. உலகம் பயன்பெறும்படி, நீ, பலத்தையும் தபிரியத்தையும் நாடு.

64. கோபம் கோபத்தைமூட்டும், அன்பு அன்பைவிளைவிக்கும், இன்சொல், இன்சொல்லை உண்டாக்கும்.

சென்ற டிசம்பர் மாதத்தின் சபைகள், கண்காக்ஷிகள் முதலியன.

---

மாசங்களில் உயர்நலம் அமைந்தமாசம் மார்கசீர்ஷம் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன்கீதையில் உபதேசித்திருக்கின்றார். அவ்விதம் சொல்லுவதற்கு முற்காலத்தில் பலகாரணம் இருப்பினும், நம் தேசத்தில இக்காலத்தில் அம்மாசத்தில் நடைபெற்று வருகின்ற சபைகளையும், மற்றைய பொதுநலம்பயக்கும் காரியங்களையும் உத்தேசிக்க, அம்மாசம் மற்றைமாசங்களைவிட மிகவும் உயர்ந்தமாசம் எனமதிக்கலாகும். அம்மாசத்தில் கூடிய கூட்டங்களும், சபைகளும், ஸமாஜங்களும், கண்காக்ஷிகளும், ஒவ்வொன்றும் ஓர் ஓர் நோக்கத்துடன் ஏற்பட்டாலும், ஆழ்ந்து பார்க்குமளவில், எல்லாம் நம் தேசம் உயர்நலமும், மேன்மையும், பெறவேண்டுமெனவும், அவை உண்டாகவும், கருதியே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆங்காங்கு கூடியசபைகள், நம்மனோர்களுக்கு, ஒப்புரவு அறிதல் என்ற உயர்ந்த தர்மத்தை அறிவுறுத்துகின்றன. ஒப்புரவு என்றால் தந்நலம் கருதாமல் பிறர்நலம் பயக்கும் கைங்கரியம் செய்தலாம். இச்சபைகளால், இந்தியதேசம் என்ற விராட் புருஷனின் மனோமய கோசம் வரவர நேர்மைபெற்று, அதனால், வலிமை அடைந்துகொண்டு வருகிறது. நம்தேசம் ஒருமனப்படுதலுக்கு இக்கூட்டங்கள் பரம சாதகங்களாம். நம்மவர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் நன்கு அறிதலுக்கும், அறிந்து பலநன்முயற்சிகள் கொள்ளுதற்கும், அதனால், நம்முடைய ஜனசமூகத்திற்கு நன்மை உண்டாகவும் இடமுண்டு. சென்ற மார்கழிமாசத்தில் நடந்த பலகூட்டங்களின் சுருக்கமான வரலாறு.

1. திரிவேணி என்ற அலஹபாத்தில்—இந்தியாதேசத்தின் பொதுஜனங்களின், யோகக்ஷேமத்தையும் நலத்தையும் அபிவிருத்திசெய்யும் நோக்கமுள்ள காங்கிரேஸ் மஹாநாடு கூடியது. நம்முடைய நலத்தை எப்போதும்கருதியும், அதற்காகபாடுபட்டும்வரும் சிலஆங்கிலர்களில், ஒருவரான, ஸர். வில்லியம் வெட்டர்பர்ண் என்பார் இச்சபையின் அக்கிராஸநம்வகித்தார்.

2. கைத்தொழில் முயற்சிநன்றாய் அபிவிருத்தியாகவேணும் என்ற நோக்கத்துடன், சர்க்காரால், கண்காக்ஷி விநோதசபை நடத்தப்பட்டது

3. கைத்தொழில் முயற்சி அபிவிருத்தியின் சபை.

4. ஹிந்துக்களின் விவாகம், ஸ்திரீகளின் கல்வி, கீழானஜாதியாரை கைதூக்கிவிடுதல், நாவாயாத்திரை, மனுவால் ஏற்படுத்திய நான்குவர்ணத்தைத்தவிர நானாவிதமான நூற்றுக்கணக்கான ஜாதிப்பிரிவுகள் இவைபோன்ற விஷயங்களின் சீர்திருத்த முறைகளைப்பற்றிய, ஸோஷல் கான்பரென்ஸ் சபை.

5. ஜனங்களுக்குள், கள், சாராயம் முதலிய லாகிரி உண்டு பண்ணும் பானங்களை தவிர்த்தலுக்குரிய உபாயங்களை ஏற்படுத்தற்குரிய சபை.

6. ஸ்திரீகளின் உரிமைகளையும் உத்தரவாதங்களையும் நலப்படுத்த ஏதுவான சீர்திருத்தமுறைகளைப் பற்றியசபை.

7. ஹிந்துக்களும் முகம்மதியர்களும் இந்தியதேசத்தினர்களாக இருப்பதில், அவர்களுக்குள் அன்னியோன்னியமும் சமாதானமும் இருக்கற்பாலன என்பதைப்பற்றிய சபை

8. நம் தேசத்தில் நூற்றுக்கணக்கான பலபாஷைகள் இருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் பல நெடுங்கணக்குள்ளவைகளாய் இருக்கின்றமையால், பல எழுத்துக்களுள்ளவைகளாக இருக்கின்றன. ஒவ்வொரு பாஷையிலும் இரண்டுவிஷயம் கவனிக்கத்தக்கன. ஒலிவடிவு, சப்தம் வரிவடிவு, எழுத்து. இவைகளில் சப்தமே முக்கியமானது. எழுத்து சௌகரியபக்ஷமாக இருக்கின்றது. ஸம்ஸ்கிருத பாஷையானது, நாகரம், தெலுங்கு, கன்னடம், கிரந்தம், மலையாளம் முதலான லிபிகளில் எழுதப்பட்டுவருகின்றது. பாஷைகளுக்குள் ஒலிவடிவு எவ்விதம் இருப்பினும், அதற்கு யாதொரு கெடுதிசெய்யாமல், வரிவடிவு, அதாவது எழுத்து தேசமெங்கும் ஒரேமாதிரியாக இருத்தல்நலம். ஒரேலிபி நம்தேசம் எங்கும் இருக்குமாகில், பல லிபிகளை கற்கிறதினால், ஏற்படும், காலவிரயம், பொருள்விரயம், இவைநீங்கும் தேசம் ஒற்றுமை பெறுதலுக்கு அனுகூலமாக விருக்கும். ஹிந்திலிபி அங்கீகரிக்ககூடியது, என்பதாக அனேகர் அபிப்பிராயம். இதைப்பற்றி அலகபாத்தில் ஒருபெரிய சபைகூடியது. இதன் பெயர் ஏகலிபி ஸ்தாபனசபை, இதன் அக்கிராஸனத்தை, கனம்தங்கிய ஐகோர்ட்டு ஜட்ஜு வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் வகித்தார்கள்.

9. சென்னபட்டணத்தில் நடந்த சபைகளின் விவரம்:—ஆதியாரில்கூடிய பிரஹ்மஞான மஹாசபை. நம் தேசம் நலம் பெறவேண்டுமென்று, தம்முடல், பொருள், ஆவி, மூன்றையும் தத்தம் செய்துகொண்டுவரும் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் அக்கிராஸனம் வகித்தார்கள். நம்தேசத்தில் மதத்துவேஷம் குன்றவேண்டும் என்பதும், ஜனங்களுக்குள் சகோதரபாவம் மேன்மேலும் அபிவிருத்தியாகவேண்டுமென்பதும், அவர் அவர் பிறந்திருக்கின்ற மதத்தின் உண்மைகளை நன்குஉணர்ந்து அவ்வுண்மைகளுக்கு ஏற்ப அனுஷ்டானம் பெறவேண்டுமென்பதும், இச்சபையாரின் முக்கியமான நோக்கங்கள். கீதையில் கிருஷ்ணபகவான் அருளியபடி, ஒரு மஹாபுருஷன், உலகத்தின் க்ஷேமத்திற்காக, சமீபத்தில் அவதாரம் ஆகப்போகின்றார் என இவ்வருஷத்தில் உறுதியான பிரஸ்தாபம் நிகழ்ந்தது.

10. கல்வி அபிவிருத்திவிஷயமான சபை.

11. தென்னாட்டில் உள்ள நாடார்களின் சபை கனம்தங்கிய ஐகோர்டு ஜட்ஜு சங்கரநாயர் அவர்கள் இச்சபையின் அக்கிராஸனம் வகித்தார்கள்.

12. வடஆர்க்காட்டில் வன்னிகுலக்ஷத்திரிய ஸமாஜம் ஒன்று நடந்தது.

13. தஞ்சாவூரில், அகோபிலமட சிஷ்யர்களின் சபைநடந்தது.

14. பம்பாயில், Y. C. A. பெருங்கூட்டம் கூடியது.

15. நாகப்பூரில், முகம்மதியர்கள், அவர்கள் ஜாதியாருக்குள் கல்வி அபிவிருத்திமுறைகளைப்பற்றிய பெரியகூட்டம் கூடினார்கள்.

16. இராமநாதபுரத்தில் சைவசித்தாந்த சபை நடத்தப்பெற்றது.

இவைபோன்ற இன்னும் பல கூட்டங்களும் கூடின. எல்லாக் கூட்டங்களும், சபைகளும், சமாஜங்களும் நேர்மையாயும், ஒழுங்காயும் யாதொரு கலகமும் தீயசம்பவமும் இன்றி இறைவன் அருளால் நன்கு நடைபெற்றன.

பத்திராதிபர்.

## Advertisement

# வியாசப்ரகாசிகை.

## A guide to Essay-writing.

வியாசப்ரகாசிகை என்னும் இப்புத்தகம் வியாசம் எழுதப்பயிலும் மாணாக்கர்களுக்கு மிகவும் உபயோகப்படக்கூடியது. இதிலடங்கிய விஷயங்கள் பல. 'ஒவ்வொன்றும் இகபர சாதகமார்க்கங்களையுணர்த்தக்கூடியதாகவிருக்கும் இது சிறுவர் சிறுமியர் யாவரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது இப்புத்தகம் ஒவ்வொரு மாணாக்கரிடத்தும் அவசியமிருக்கவேண்டும். விஷயங்கள் யாவும் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல" விளங்கத்தக்கபடி விவரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு சிறந்த நூலென்பதை இதன் முதற்பக்கம் காணப்படும் பல கல்விமான்களுடைய நல்லபிப்பிராயங்களிலிருந்து அறியலாம். சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

விலை அணா 8. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

Apply to

"CHAKRAVARTHINI" OFFICE.
Triplicane.

---

## NOTICE.

Wanted a clerk who can write English and Tamil well, keep accounts. Salary 12 to 15 for the "Poornachandrodya" journal office. Apply to the undersigned. Applications will be received up to 15th March 1911.

P. NARAYANA AIYER,
Editor & Manager,
POORNACHANDRODAYAM.

15—1—11. MADURA.